# ஆரியர்-தமிழர் கலப்பு



ஆசிரியர் : ந. சி. கந்தையா பிள்ளை





முத்தமிழ் நிலையம், சென்னை.

# ஆரியர் தமிழர் கலப்பு



ஆசிரியர்:

யாழ்ப்பாணத்து நவாலியூர்,

ந. சி. கந்தையா பிள்ளை.

[(1) தமிழகம், (2) தமிழர் சரித்திரம், (3) தமிழ் இந்தியா (4) தமிழர் யார்? (5) வரலாற்றுக் காலத்துக்கு முற்பட்ட பழந்தமிழர் (Pre Historic Tamils) (6) நமது நாடு, (7) நமது மொழி, (8) தமிழ், (9) சிவன், (10) பொருளுரைக் கொத்து, (11) அறிவுரை மாலை, (12) அறிவுரைக் கொத்து, (13) பத்துப் பாட்டு வசனம், (14) கலித்தொகை வசனம், (15) பரி பாடல் வசனம், (16) கலிங்கத்துப்பரணி வசனம், (17) புறப் பொருள் வசனம், (18) பதிற்றுப்பத்து வசனம், (19) அக நானூறு வசனம் (20) தேம்பாவணி வசன பாடம், (21) பொது அறிவு நூல், (22) மதனாபிஷேகம், (23) பெண்கள் உலகம் முதலிய பற்பல நூல்களின் ஆசிரியர்.]



பதிப்புரிமை] 1946 [விலை அணா-8

# பொருளடக்கம்

# முன்னுரை

சாதிச்சண்டை சமயச்சண்டை ஒழிய வேண்டுமென மக்கள் உணரும் இக்காலத்தில் "ஆரியர் தமிழர் கலப்பு" என்பது போன்ற நூல் வெளிவர வேண்டிய அவசியம் யாது எனப் பலர் வினவலாம். ஒரு காலத்தில் இந்திய நாடு முழுமையும் ஒரு மொழியும் ஒரே சமயமும் நிலவின. ஆரிய மக்கள் புதிதாக இந்திய நாட்டை வந்தடைந்தபோது, தமிழ் மக்கள் ஆரியரின் தெய்வங்களை வழிபட மறுத்தனர். இக் காரணத்தினால் ஆரியருக்கும் தமிழருக்கு மிடையில் அடிக்கடி போர்கள் நிகழ்ந்தன. பின்பு இரு மக்களும் ஒன்றுபட்டுக் கலந்தனர். அப்பொழுது ஆரியரின் சமயக் கொள்கைகள் வடக்கே வலுவடைந்தன. ஆரியமதக் கொள்கைகளுக்கு மாறாகப் புத்த சைன மதங்கள் தோன்றி, அவைகளை எதிர்த்துப் போராடின. புத்த சைன மதங்கள் தமிழரின் பழைய மதக்கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டவை. யாகங்களைச் செய்யும் (மந்திர வித்தைக்காரர் போன்ற) பிராமணர் தென்னாடு போந்தனர். அவர்கள் தெற்கே தமது மதத்தைப் பார்ப்பன மக்களிடையே பரவச் செய்தனர். தமிழர் ஆலயங்கள் பிராமண மதத்தினர் வசப்பட்டன. தமிழர் மதத்தைக் கைவிட்ட பார்ப்பனர் தம்மை ஆரியரென்றும், தமது சாதிமொழி சமஸ்கிருதம் என்றும், தமது கோத்திரம் (பரம்பரை) பாரத்துவாச கோத்திரம், கௌசிக கோத்திம், கௌண்டில்லிய கோத்திரம், ஆத்திரேய கோத்திரம் போன்ற ஏதோ வடநாட்டு இருஷி கோத்திரம் என்றும் கூறிக்கொள்வாராயினர். இன்று ஒரு பிற்றரோ அல்லது அல்லாப்பிச்சையோ தமிழ் வைணவன், அல்லது சைவனுக்குக் குருவென வந்தால், அவன் அவர்களை ஏற்றுக்கொள்ள மறுப்பான். பாரத்துவாச கோத்திரத்தானோ கௌண்டில்ய கோத்திரத்தானோ கொள்கையளவில் பிற்றர் அல்லது அல்லாப்பிச்சை போன்றவனே. தம்மூர்க்கு அன்னியமான ஒரு மொழியைத் தனது சாதிமொழியென்றும், தமிழரல்லாத பிறரைத் தமது கோத்திர முதல்வர்கள் எனறும் கூறிக்கொள்ளும் ஒரு கூட்டத்தினரைத் தமக்கு மத குருக்களென்றும், மோட்ச வழிகாட்டிகள் என்றும், கொண்டு

உழலுகின்ற தமிழ் மக்களின் கண் திறக்கும்படியோ இவ்வகை நூல்கள் வெளியிடப்படுகின்றன.

இற்றைக்கு நாற்பத்தைந்து ஆண்டுகளின் முன் "தமிழர் ஆரியர் கலப்பு" என்னும் முகப்போடு பண்டிதர் சவரிராயன் அவர்களால் எழுதப்பட்ட கட்டுரை ஒன்று சித்தாந்த தீபிகை என்னும் மாத இதழ்களில் வெளிவந்தது. அக்காலத்தில் அரப்பா மொகஞ்சதரோப் புதை பொருளாராய்ச்சிகள் போன்ற தமிழரின் பழைய வரலாறுகளை விளக்கும் சான்றுகள் கிடைக்கவில்லை. ஆகவே அக் கட்டுரையில் பல பொருட் குறைபாடுகள் காணப்பட்டன. அக் கட்டுரையின் ஏற்ற பொருள்களைக் கொண்டும், ஏலாதவற்றை விடுத்தும், புதியவற்றைச் சேர்த்தும் இந்நூல் எழுதப்படலாயிற்று. பண்டிதர் சவரிராயனவர்கள், தமிழர் ஆக்கத்தின் பொருட்டுப் பெரிதும் உழைத்து வந்தவராவர். இவர் பேராசிரியர் சுந்தரம் பிள்ளைக்கு அடுத்தபடியில் வைத்துப் போற்றத்தக்கவராவர். பண்டிதர் சவரிராயன் மதத்தில் கிறித்துவ கத்தோலிக்க ராயினும் மிக நடுநிலைமையோடு தமிழர் பண்டை வரலாறுகளை ஆராய்ந்துள்ளார்.

ந. சி. கந்தையா.

# ஆரியர் தமிழர் கலப்பு

## தோற்றுவாய்

இந்திய நாடு முழுவதிலும் ஒரு காலத்தில் தமிழர் என்னும் ஒருகுல மக்களே வாழ்ந்தார்கள். நாலாயிரம் ஆண்டுகளின் முன் ஆரியர் மேற்குத் திசையினின்றும் வந்து இந்திய நாட்டை அடைந்தார்கள். அவர்கள் இந்தியநாட்டில் சிறிது சிறிதாகக் குடியேறினார்கள். இடை இடையே தமிழ் மக்களுக்கும் ஆரியருக்கும் இடையில் போர்கள் நடந்தன. காலத்தில் இரு மக்களும் கலந்து ஒன்றுபட்டார்கள். அதனால் வடக்கே புதிய மொழிகளும் புதிய நாகரிகமும் தோன்றின. இவைகளை எல்லாம் தெளிவுபடுத்திக் கூறும் நூல்கள் தமிழிலோ ஆங்கிலத்திலோ இதுவரையும் வெளிவரவில்லை. அவ்வாறு வெளிவராமைக்குக் காரணம் பலர் இத்துறையில் நுழைந்து ஆராய்ச்சி செய்யாமை ஒன்று; மற்றொன்று மதப்பற்று. "சமக்கிருதம் தமிழிலும் பார்க்க உயர்வுடையது; அது தெய்வமொழி; அதற்கு அதிகாரிகள் என்போர் பூதேவர்; அவர்கள் அன்னிய கோத்திரமும் குலமும் உடையர்" என்னும் கொள்கைகளை ஒரு சாரார் பொதுமக்கள் உள்ளத்தில் பதியும்படி செய்து அவர்களிடையே தலைமை பெற்று வாழ்க்கை வாய்ப்புக்களைப் பெற்றுள்ளார்கள். உண்மையான வரலாற்று ஆராய்ச்சி இக்கொள்கைகளை எல்லாம் கவிழ்த்துவிட வல்லது. இப்புரட்சியை விரும்பாத வகுப்பினரே (பெரும்பாலும்) தமிழர் வரலாற்று ஆராய்ச்சியில் இது வரையும் ஈடுபட்டு இருந்தார்கள்; இருக்கின்றார்கள். உண்மையான தமிழர் வரலாறு வெளி வராமைக்கு மற்றும் ஒரு காரணம் இஃது ஆகும்.

இப்பொழுது அரப்பா மொகஞ்சொதரோ காலம் வரையிலுள்ள தமிழ் மக்களின் வரலாறு ஓர் அளவில் வெளிச்சமாயிற்று. ஆரியர் வருகைக்கும் புத்தர் காலத்துக்கும் இடையிலுள்ள தமிழரின் வரலாறு இருளாக விருக்கின்றது. அப்பகுதியை விளக்குகின்றது இந்நூல். தமிழர் வாலாற்றில இப்பகுதியே சிறப்புடையது.

வரலாறு என்பது அரசரைப் பற்றியும், அவர் காலத்து நிகழ்ந்த சில சிறப்புச் செயல்களைப்பற்றியும் மாத்திரம் கூறப்படும் நிரல் என்று கருதுதல் தவறு. வரலாறு என்பது மக்களின் வாழ்க்கை முதலியன, காலத்துக்குக் காலம் ஒரு போக்கினின்று இன்னொரு போக்காக மாறுதல், அவைகளுக்குக் காரணம்போன்ற இவைகளை ஒழுங்குபடுத்திக் கூறுதலே யாகும். அரச பரம்பரைகளும் அவைகளின் காலங்களும் அக்காலங்களில் நிகழ்ந்த சிறப்புச் செயல்களுமாகிய இவை வரலாற்றின் பகுதிகளே யாகும்.

## ஆரியர்

ஆரிய தேசத்தினின்றும் வந்து அலைந்து திரியும் ஒரு கூட்டத்தினர் இற்றைக்கு நாலாயிரம் ஆண்டுகளின் முன் சிந்து நதிக்கரையிற் குடியேறினர். ஆரியர் என்னும் சொல்லுக்குப் 'பிரபுத்தனம்' என்னும் பொருள் பிற்காலத்திற் கொடுக்கப்பட்ட தாயினும் அதற்கு அவர் மொழியில் *மிலேச்சர் என்பதே பொருள். இப்புது மக்கள் எங்கிருந்து

* தமிழர் நெடுங்காலம் ஆரியரை மிலேச்சர் என வழங்கினர். நிகண்டு நூல்களில் ஆரியரின் பெயர்களுள் ஒன்ருக மிலேச்சர் என்னும் சொல் காணப்படுகின்றது. மேற்குத் தேசங்களில் அன்னிய சாதியார் "பார் பேரியர்" (Barbarians) எனக் கூறப்பட்டார்கள். பார் பேரியர் என்பதற்கு அன்னியர் என்பது பொருள். மிலேச்சர் என்பதும் அவ்வகைப் பொருளுடைய தாகலாம்.

வந்தார்கள்? இப்பாரத பூமியிலுள்ள ஒவ்வொரு உயிருள்ள பிராணியும் இப்பூமிக்கே சொந்தமானது என்று நமது முன்னோர் நம்பினர். மொழி ஆராய்ச்சியால் ஒவ்வொரு மக்கட் கூட்டத்தினருடையவும் உற்பத்தி இடத்தை அறிந்து கொள்ளுவது இலகுவா யிருக்கின்றது. ஒரு சாதியாரின் சரித்திரத் தொடர்பும், சரித்திரத்துக்குரிய ஆதாரமும் எங்கு நின்று விடுகின்றனவோ அவ்விடத்து, மொழி, சரித்திர காலத்துக்கு முற்பட்ட அவர் வரலாற்றையும், அவர் பிரிவதற்கு முன் வாழ்ந்து வந்த பொது இடத்தையும் அறிவிக்கின்றது.

சிந்து நதிக்கரைகளில் புதிதாக வந்து குடியேறிய மக்களின் மொழி ஆராய்ச்சி, அவர்களின் உற்பத்தியைப் பாரத பூமிக்கு அப்பால் காஸ்பியன், ஆரல் கடல்களை அடுத்த நாடுகளுக்கு அப்பால் கொண்டுபோய் விடுகின்றது. ஆரற் கடலோடு ஒரு காலத்து இணைக்கப்பட்டுக் கிடந்த காஸ்பியன் கடலும் தெற்கே கிடந்த வனாந்தரமும் இம்மக்களை நாகரிகத்தில் முதிர்ந்த பாபிலோனியரோடு கலந்து கொள்ளாதபடி தடுத்தன. தமது நாட்டினின்றும் கிளம்பிய ஒரு கூட்டத்தினர் நீண்டகாலம் தென்கிழக்காக அலைந்து திரிந்தனர். பின்பு தெற்கு நோக்கிச் சென்று சிந்து நதியின் மேற்குக் கரையிற் குடியேறினர். அவர்கள் சிந்து நதிக்கரையில் வந்து குடியேறியது கி. மு. 2000 ஆண்டுகள் வரையில் என்பது மேல்நாட்டு ஆசிரியர்களின் துணிபு.

## பரதரும் பாரத நாடும்

ஆரியர் சிந்து நதிக்கரையில் வந்து முதன்முதற் குடியேறும்போது குமரி முதல் இமயம் வரை நாகரிகம் முதிர்ந்த ஓரே இன மக்கள் குடியேறி யிருந்தனர். பரதர் என்னும் பூர்வ சாதியார் குடியேறி யிருந்தமையின் இந்நாடு

'பாரத வருடம்' என்னும் பெயர் பெற்றது என்று விட்டுணு புராணங் கூறுகின்றது. இந்தியநாடு முழுமையும் பரதர் வசம் இருந்தது. பரதர் என்னும் சொல் உச்சரிப்பு வேறுபாட்டால் பிற்காலத்துப் பல மாறுதல்கள் அடைந்தது.

பரதவர் என்னும் பெயர் மலையைக் குறிக்கும் 'பார்' என்னும் அடியாகப் பிறந்ததென்பர் டாக்டர் ஒப்பேட் அவர்கள். பார் என்பதன் ஆதிப்பொருள் மலை என்பதை ஏற்றுக் கொள்ள வேண்டியிருக்கின்றது. தமிழருடைய ஆதி இடம் மலையாகவே இருந்தது. பழைய தமிழ்நாட்டு அரசனுக்குச் சிறப்பாக ஒரு மலை உரியதாக விருந்தது. இது அவனுடைய முன்னோர், மலையிலுள்ளவர்கள் என்பதை ஞாபகப் படுத்துகின்றது. தமிழ்க் கடவுளாகிய முருகனது இருப்பிடங்கள் மலைகளாகக் காணப்படுகின்றன. அக்கடவுள் மலை உச்சிகளிலேயே பெரிதும் வணங்கப்படுகின்றார். தமிழ் மக்களின் காதல், அரசியல்களைக் கூறும் அகப்பொருள் புறப்பொருள் நூல்கள், அவர்களின் பழைய பழக்க வழக்கங்களை விரித்துக் கூறுகின்றன. தலைவனும் தலைவியும் சந்தித்துக் காதலிக்கும் காட்சி மலையிடமாக விருந்தது. போரின் ஆரம்பமாகிய நிரை கவர்தலும் மலையை அடுத்த நிலங்களில் நிகழ்ந்தது. ஆதலால் தமிழரின் தொடக்கம் யாதோ ஒரு மலையிடம் எனத் தெரிகின்றது. தமிழர் பெரிய வெள்ளப் பெருக்குத் தொடர்பாகவும் மலையையே கொண்டனர். மனு என்னும் திராவிட அரசனின் பேழை மலயக் குன்றிற் றங்கியதென்றும், அவன் பேழையை விட்டு இறங்கி மலயத்தின் ஓர் இடத்தில் மக்களின் நன்மைக்காகக் கடுந்தவம் செய்தானென்றும் மச்சபுராணங் கூறுகின்றது. முற்காலத்தவர் பல காரணங்களை முன்னிட்டு மலைகளையும் உயர்ந்த இடங்களையும் வாழும் இடங்களாகக்

கொண்டனர். தமிழரின் ஆதி. இருப்பிடம் எல்லம்மலை ஆகலாம். * இது மேருமலையின் ஒரு சிகரம். மேருமலையின் ஒரு கொடுமுடி, இன்றைய இலங்கைத் தீவு எனப்படுகின்றது. இலங்கைத் தீவுக்கு எல்லம் என்பது பழைய பெயர். எல்லத்தினின்றும் சென்று யூபிராத்தஸ் தைகிரஸ் ஆற்றோரங்களில் குடியேறிய மக்கள் அங்குள்ள ஓர் இடத்துக்கும் மலைக்கும் எல்லம் எனப் பெயர் இட்டு வழங்கினர்.

சிந்து நதியின் மேற்குக் கரையில் ஆதியில் வந்து குடியேறிய ஆரியர், பாரத நாடு சீர்திருத்த மடைந்திருப்பதையும், அது வலிய அரசரால் நன்கு ஆளப்படுவதையும் கண்டனர். இருக்குவேத பாடல்கள் அவர்களுடைய தொண்ணூறு கோட்டைகளையும் ஏழு வலிய அரண்களையும் பற்றிக் கூறுகின்றன. இவை பஞ்சாப்பில் இருந்தன வாகலாம்.

ஆரியர் வருகைக்கு முற்பட்ட இந்திய அரசர் பரதர் எனப்பட்டனர். இருபது அரசரையுடைய இப்பரம்பரை, ஐந்து நூற்றாண்டுகளாக ஆட்சிபுரிந்து ஆரியர் வருகைக்கு முன் வீழ்ச்சி யடைந்திருக்க வேண்டும். அவர்களுக்குப்

* Hence we shall not be far wrong if we infer that South India gave a refuge to the Survivers of the deluge, that the culture developed in Lemuria was carried in South India after this submergence and South India after its submergence was probably the cradle of the post deluvian human race—Indian Antiquary - 1911 - P 118.

Making use of the sea route between India and the Euphrates valley by which the Sumerians the ancient Dravidian inhabitants of the sea - land to the south of Babylon must have come from India—The history of Aryan rule in India—P. 5. E. B. HAVELL.

பின் இன்னொரு சந்ததியினர் ஆண்டனர். இவர்களை ஆரியர் அசுரர் என்று அழைத்தனர்.

## அசுரர்

அசுரர் என்பதற்கு இறைவன் என்பது பொருள். இது அரசு என்னும் தமிழ்ப் பதத்தின் உச்சரிப்பு வேறுபாடு எனக் கருத இடமுண்டு. இருக்கு வேதத்தில் அசுரர் என்னுஞ்சொல் மேன்மை அல்லது வலிமை என்னும் பண்பைக் குறிக்கின்றது; இருக்கு வேதத்தின் பத்தாம் மண்டிலத்தைத் தவிர, மற்ற இடங்களிலெல்லாம் கடவுளைக் குறிக்கப் பயன்படுத்தப் பட்டிருக்கின்றது. இவ்வுண்மையைத் தத்தர் 'பழைய இந்தியா' என்னும் நூலின் 201-வது பக்கத்தில் விளக்கியிருக்கின்றார். பிராமணங்களில் அது வேறு பொருளில் வழங்கப்பட்டிருக்கின்றது; அங்கு அது கடவுளின் பகைவரைக் குறிப்பதற்குப் பயன்படுகின்றது.

## ஆரியர் இந்திய நாட்டிற் குடியேறுதல்

சிந்து நதி தீரத்திற் குடியேறினோர் படை எடுத்து வந்தோரல்லர். அவர்கள் ஆடு மாடுகளுடன் புற்றரைகளை நாடி அலைந்து திரிந்த சாந்தமானவர்களே. விருந்தினரை வரவேற்று ஓம்புவது தமிழரின் இயற்கைப் பண்பு. அரசர் புதிய மக்களுக்கு அன்பும் இரக்கமுங் காட்டினர். பயிரிடாது கிடந்த தரிசு நிலங்களைத் திருத்திப் பயிரிடப் புதிய மக்கள் அனுமதிக்கப்பட்டார்கள். இவர்கள் பலம் அடைந்தபோது நாடுகளைத் தமக்குச் சொந்தமாக்க விரும்பினார்கள். அப்பொழுது தமிழருக்கும் ஆரியருக்கும் இடையில் பெரும்போர்கள் நிகழ்ந்தன. அப்போர்களைப் பற்றி ஆரியரின் பழைய பாடல்களின் தொகுதிகளாகிய

வேதங்கள் குறிப்பிடுகின்றன. * ஆரியர் தாம் இந்தியாவை அடைந்து அறுநூறு ஆண்டுகளுள் பஞ்சாப் தேசம் முழுவதையும் தம் வசமாக்கினார்கள். அக்காலத்திலேயே (கி. மு. 2000-கி. மு. 1200) வேத பாடல்கள் செய்யப்பட்டன. பிற்காலங்களில் ஆரியர் தமிழர் என்போர்களுக்கிடையில் விவாகக் கலப்பு உண்டாயிற்று; அதனால் இரு சாதியினரும் ஒன்றுபோற் சேர்ந்து பல மடைந்தனர். ஐந்து ஆறுகள் பாயும் நாட்டிலுள்ளவர்கள், கலப்பில்லாத சாதியார் என வெளி உலகிற் சொல்லப்பட்டாலும், அவர்கள் ஒரே இனத்தைச் சேர்ந்த ஆரியக் குழுவினர் என்று சொல்லமுடியாது. புராண, கன்னபரம்பரை வரலாறுகளால் பஞ்சாப்பின் பழைய மக்கள் எட்டு வெவ்வேறு கூட்டத்தைச் சேர்ந்தவர்கள் என்று விளங்குகின்றது. அவர்களில் மூன்றிலொரு பங்கினர் ஒரே இனத்தைச் சேர்ந்தவர்கள் என ஆராய்ந்து கூறலாம். ஓர் இனத்தைச் சேர்ந்த அத்திரி, கண்ணுவர், விசுவாமித்திரர் என்னும் மூன்று மரபினரும், தமிழர் அல்லது பாதராவர். பிராமணர் என்று கருதப்படுவோர் பலர் தமிழ்

* வேதபாடல் செய்யப்படுகின்ற காலத்திலேயே ஆரியர் தமிழர் கலப்பு உண்டாயிருந்தது. வேதபாடங்களைச் செய்தவர்களிற் சிலர் தமிழரே, சிலர் ஆரியர் தமிழர் கலப்பினால் தோன்றியவர்களாவர். அதனாலேயே வேத பாடல்களில் தமிழ்ச்சொற்கள் காணப்படுகின்றன. வேதபாடல்களைச் செய்தவர்கள், சிலரைப்பற்றிச் சொல்லப்பட்ட நிறம் முதலியவற்றால் அவர்கள் ஆரியரல்லர் எனத் தெரிகிறது. "Many Vedic kings and Rishis came to have Asura Blood in them as is indicated by the colour. Sages like Vasishta, Agastya and Visvamitra were given the same father Mitra Varna-God Varna was himself an Asura. Banerji believes that the Asuras were different from Dasus but identical with Dravidians. The Dasus he points out were black, while the Asuras were brown or golden—Pre-musalman India. p p 172, 174,177.

—V. Rangacharya, M. A.

வகுப்பைச் சார்ந்தவராவர். பழைய காலத்தில் சாதித் தடை இருக்கவில்லை. கலப்பு மணங்கள் நடைபெற்றன. முன் உறைந்தவர்களும் புதிய மக்களும் கலந்தமையால் வலிமை ஏற்பட்டது. அரசாங்கம் பலப்பட்டது. உலக சரித்திரத்தில் இம்முறை புதுமையானதன்று.

## பாரதப் போர்

டெல்லிக்கு அண்மையில் கங்காநதி தீரத்தில் இருந்த அத்திஞபுரியாகிய தமிழர் இராச்சியம், ஆரியரின் வளர்ச்சியைப் பஞ்சாப்பிற்கு வெளியே செல்லாமல் தடைசெய்தது. பாஞ்சாலம், விதேகம், கோசலம், விஸ்வல, (வட) மதுரை, மகதம், மாளவம் முதலியன தமிழரின் மற்றைய இராச்சியங்களுள் முக்கியமானவை. இந்நாடுகள் இமயமலை, விந்தியமலை, கிழக்கு மேற்குக் கடல் ஆகிய எல்லைகளின் இடையே கிடந்தன. பாரசீகக் கரையிலுள்ள நாடுகள் அத்திஞபுரத் தரசனுக்குத் திறை அளித்தன. இது பாரதப் போர் காலம் வரையில் நடைபெற்றது. அம்பல்லா என்னும் இடத்துக்கு இருபத்தாறுவது மைலிலுள்ள தனேஷ்வா என்னும் இடத்தில் கி. மு. 14-ம் நூற்றாண்டில் பாரதப்போர் விளைந்தது. குரு, பாண்டவர் என்னும் ஒரே குடும்பத்தினருக் கிடையில் இப்போர் நிகழ்ந்தாலும், பாரத பூமியிலுள்ள அரசர் எல்லோரும் ஒவ்வொரு பக்கத்தைச் சேர்ந்து போர் செய்திருக்கின்றனர். இப்போர் வடக்கே இருந்த இராச்சியங்களுக்குத் தலை அடியாயிருந்தது. சிறு இராச்சியங்கள் சுயேச்சை பெற்றன. பஞ்சாப்பில் அடைக்கப்பட்டிருந்த ஆரியருக்கு இப்பொழுது வழி திறந்தது. சொகுசான வாழ்க்கை முறையினால் தமிழர் போர் செய்யும் வீரத்தை இழந்தனர்.

இவ் விவரங்களை இருக்கு வேதத்திற் காணலாம். இருக்குவேதம் பஞ்சாப் கபூல் என்னும் இரு இடங்களைப் பற்றிச் சொல்லுகின்றது. சொல்லப்பட்டவற்றுள் கங்காநதியும், யமுனையும் சில இடங்களில் மாத்திரம் கூறப்பட்டுள்ளன. ஆகவே பஞ்சாப்பிலிருந்த ஆரியர், அவற்றை நன்கு அறிந்திருக்கவில்லை என விளங்குகின்றது. அப்பொழுது ஆரியர், வானம், புயல், இடி, காற்று முதலிய இயற்கைப் பொருள்களை வணங்கினர். மிருகபலி கொடுத்தனர். அவர்கள் சமயச் சடங்குகளும் யாகங்களும் புரியும் இடங்கள் சிந்துநதிக் கரையும் அதன் கிளைகளும் சரஸ்வதி நதியுமாயிருந்தன. அவர்கள் தமிழர்க்குரிய சிவ வணக்கத்தையும் சமயக் கொள்கையையும் அறியாதவர்களாயிருந்தனர்.

## சிவ வணக்கம்

பழைய வேத பாடல்களில் சிவனைப்பற்றிச் சொல்லப் படவில்லை என முதல் முதல் கூறியவர் டாக்டர் ஸ்டிபின் ஆவர். உருத்திரன், அக்கினி எனக் கூறப் பட்டாலும் அக்கினியையும் உருத்திரனையும் சிவன் என்று கூறமுடியாது. தக்கன் சிவனை யாகத்துக்கு அழைக்கவில்லையென்றும், ஆனால் பதினொரு உருத்திரரும் யாகத்துக்குச் சென்றிருந்தனர் என்றும் புராணம் கூறுகின்றது. சிவன் இருவகை வழிபாட்டுக்கு உரியர். ஒன்று கண்ணுக்குப் புலனாகாததியானவடிவம். ஒன்று கண்ணுக்குப் புலப்படும் இலிங்க வடிவம். பூவும் புகையும் கொண்டு கடவுளை வழிபடுதல் தமிழரின் பழைய முறை. பூ இதயத்தையும், புகை அது இளகுவதையும் குறிக்கும். இலங்கை வேந்தனும் இராவணீயம் என்னும் இசைநூல் செய்தவனுமாகிய இராவணன், பொன் இலிங்கம் ஒன்றைத் தன்னுடன் கொண்டு திரிந்து பூவும் புகையும் கொண்டு வழிபட்டான். இராவணன் மாத்

திரமல்லன்; வாணன் வாலி முதலானோரும் * தமிழ் முனிவர்களும் சிவ வணக்கத்துக்குரியோரா யிருந்தனர். அவர்கள் சிவனைத் தியான உருவமாகவும் மூர்த்தி வடிவமாகவும் வழிபட்டனர். பஞ்சாப்பில் வாழ்ந்த ஆரியர் இதுவரையும் தமிழர் மதத்தைப் பின்பற்றுதும் சிவ வழிபாட்டை அறியாதும் இருந்தனர். ஆரியருக்கும் தமிழருக்கும் பகை ஏற்பட்டால் அது சமயத்தைப் பொறுத்ததா யிருந்தது. ஆரியரின் தெய்வங்கள் கீழாக மதிக்கப்படலாயின; ஆரியர் புரியும் யாகங்களும் அழிக்கப்பட்டன. இக்காரணத்தினாலேயே உயர்ந்தோரைக் குறிக்கும் அசுரர் என்னும் சொல், தேவர்களின் எதிரிகள் என்னும் பொருளைக்குறிக்க இருக்குவேதத்தின் பத்தாம் மண்டிலத்திலும், பிராமணங்களிலும் வழங்கப்பட்டுள்ளது. ஆரியரின் இயற்கை வணக்கத்தோடு தமிழருடைய உயர்ந்த வழிபாட்டு முறைகளை ஒப்பிட்டுப் பார்க்குமிடத்துப் பின்னவை மிகச்சிறந்தனவென்று எவர் மனத்திலும் படுதல் இயல்பு. ஆரியர் தமது கடவுளைப் பிரகாசமுள்ளவன் என்னும் பொருளில் தேவன் என்று அழைத்தனர்; தமிழர் தமது கடவுளை எல்லாவற்றையும் கடந்த பொருள் என்னும் கருத்தில் கடவுள் என

* வடநாட்டு முனிவருக்கும் தென்னாட்டு முனிவருக்கும் தம்முள் மிக வேறுபாடுண்டு. வடநாட்டு முனிவர் மந்திரவாதிகள். காட்டில் சென்று ஏதோ மந்திர வித்தை புரிபவர். எப்பொழுதும் கோபங் கொதித்தெழும் இயல்பினர். அவர்களைக் கண்டு மக்களும் அரசரும் அஞ்சினர். அவர்கள் தத்துவ ஞானிகளல்லர்; மந்திர வித்தைக்காரரே. தமிழ்நாட்டு முனிவர் தத்துவ ஞானியர். அவர்களைக்கண்டு யாரும் அஞ்சுவதில்லை. அவர்கள் யாருக்கும் அஞ்சுவதும் இல்லை. அவர்கள் அருள் ஒழுகும் நெஞ்சினர். எவ்வுயிரிடத்தும் அன்பாயிருக்கும் இயல்பினர். வடநாட்டு முனிவர்களைப்போலச் சாபம் இடுபவரல்லர். இவ் வியல்பினை விண்டர் நிற்ஸ் (Wintenitz) என்பார் நன்கு எடுத்து விளக்கியுள்ளார்—History of Indian Literature—Vol. 2.

வழங்கினர். சிவன் என்னும் சொல், சிவ என்னும் அடியாகப் பிறந்து, நல்லது, இனியது, அழகியது முதலிய பொருள்களைக் கொடுக்கும்.

## ஆரியர் கங்கைக் கரை நாடுகளை அடைதல்

ஆரியர் இந்தியாவை அடைந்தபின் பாடிய நூல் இருக்குவேத சங்கிதை என்பதை இந்திய வரலாற்று ஆசிரியர்கள் எல்லாரும் ஒப்புக்கொள்கின்றனர். பஞ்சாப்பில் வாழ்ந்த கலப்புச் சாதியினர் 'சற் லெஸ்' என்னும் ஆற்றை இன்னும் தாண்டவில்லை யென்றும், அவ்வாற்றுக்கு அப்பால் அவர்கள் வாழ்ந்ததைப்பற்றி அவர்கள் வேதபாடல்கள் கூறவில்லை யென்றும் முன்னேரிடத்திற் குறிப்பிட்டோம்.

ஆகவே கி. மு. 2000 முதல் கி. மு. 1400 வரையுள்ள 600 ஆண்டுகளிலும் அவர்கள் பஞ்சாப், கபூல், காந்தாரம் முதலிய நாடுகளில் வாழ்ந்தார்கள் என்று தெளிவாகப் புலப்படுகின்றது. ஆரியர் குடியேறி வாழ்ந்த நாட்டுக்கு எதிர்ப்புறத்தில் வாழ்ந்த மக்கள், ஆரியரோடு கலக்கவில்லை என்பதும், அவர்கள் முற்றுக வேறு கூட்டத்தினரா யிருந்தார்கள் என்பதுமே, இதனுற் பெறப்படும் முதன்மையான தீர்மானமாகும். அக்கூட்டத்தினர் முன் நாம் கூறிய தமிழர் அல்லது பரதர் ஆவர்.

பிராமணங்கள், ஆரணியங்கள் உபநிடதங்கள் ஆதியன கி. மு. 1400 முதல் கி. மு. 10-ம் நூற்றுண்டு வரையிலும் செய்யப்பட்டன. இவ்விரண்டாம் காலப் பகுதியிற் செய்த நூல்கள் மாத்திரம் கங்கை ஆற்று வெளிகளில் வாழ்ந்த குரு, பாஞ்சால, காசி, கோசல, விதேகர்களைப்பற்றிச் சொல்லுகின்றன. பாரதப் போரின் பின் சிறு இராச்சியங்கள் விடுதலை யடைந்தன. அப்பொழுது ஆரியர், பஞ்

சாப்பைக் கடந்து கிழே சென்றனர். அவர்கள் கோசலத்தைக் கைப்பற்றியபோது கங்காநதிப் பள்ளத்தாக்கில் இவர்கள் பெரிய சாதியாராக விளங்கினர்.

தசரதனின் பாட்டனுகிய புகழ்படைத்த இரகுவே கோசலத்திலுள்ள சகேதாவில் ஆரிய பரம்பரையை முதலில் நாட்டினுன். சகேதாவை ஆண்ட அரசருள் தசரதன் மிகப் புகழ் படைத்தவன். இவன் நீண்ட காலம் அரசுபுரிந்தான். அக்காலத்தில் கோசல இராச்சியம் உச்சநிலை அடைந்திருந்தது. அதன் இராசதானியாகிய சகேதா, அயோத்தி (வெல்லப்படாதது) என்னும் புதிய பெயர்பெற்றது. இராமாயணத்தையும் இதுபோன்ற நூல்களையும் எழுதிய ஆசிரியர்கள் இராமனின் தந்தையாகிய தசரதனை, ஆரிய வமிசத்தின் 56-வது அரசனுகக் கூறுகின்றனர். ஆரிய பரம்பரைக்கு முன் சகேதாவை ஆண்ட பழைய தமிழ் அரசரோடு சேர்த்து இவர்கள் பிழையான கணக்குச் செய்திருக்கின்றனர். பாரதப் போருக்குமுன் குருகுலத்தவருக்கு இராசதானியாக விருந்த அத்தினபுரம், மற்ற இராச்சியங்களுக்குத் தலைமையாயிருக்குந் தன்மையை இழந்துவிட்டாலும், கங்கை ஆற்றின் கரையிலுள்ள செழிப்பான இடமாகக் கருதப்பட்டது. குரு, பாஞ்சாலம், விதேகம், காசி முதலிய இராச்சியங்கள் ஒன்ருேடு ஒன்று நட்புக் கொண்டிருந்தன. போர் முடிந்தபின் பாண்டவர் பழைய நாள் தமிழர் வழக்கப்படி தவஞ்செய்யக் காட்டுக்குச் சென்றனர் * அருச்சுனனின் பேரனுன பரிச்சித்து அத்தினபுரத்

---

* இருக்கு வேத பாடல்களிற் காட்டிற் சென்று தவஞ் செய்யும் வழக்கைப்பற்றிக் காணப்படவில்லை எனத் தத்தர் கூறியிருக்கின்ருர்.

Krishna represented in the Maha - Bharata as Black and so is Arjuna - so also is Vyasa who has related the story. And so is Draupathi the wife of the

துக்கு அரசனானன். அவனுக்குப் பின் சனமேசயன் பட்டம் எய்தினான். பரிச்சித்துவும், சனமேசயனும் கல்விப் பிரியரா யிருந்தனர். ஆரியர்களுடைய இலக்கியங்களை ஒளி அடையும்படி செய்தவர்கள் இவர்களே. பரத வமிசத் தவன் அல்லது தமிழனாகிய சனமேசயன் ஆரியரின் இலக்கியங்களை ஆதரித்தானென்பது வியப்புக்கு இடமாயிருக்கலாம். இவ்வகையான சம்பவங்கள் எவ்வாறு நிகழ்கின்றன என்பதற்குச் சில எடுத்துக்காட்டுகள் தருகின்றோம். திருதராட்டிரன் காந்தார அரசன் புதல்வியாகிய ஆரிய கன்னியை மணந்தபின், அத்தினபுர அரண்மனை மொழி ஆரியமாக விருந்தது. இது புதுக்கோட்டை இளவரசரொருவர் திருச்சினாப்பள்ளியிலுள்ள நாய்க்கர் கன்னியை மணந்ததனால், முன் அரண்மனையில் வழங்கிய தெலுங்குமொழியின் இடத்தைத் தமிழ் ஏற்றுக்கொண்டதுபோல் ஆகும். திருதராட்டிரனின் புதல்வனாகிய துரியோதனனது அரசாட்சி நன்கு அமைக்கப்பட்டிருந்தது. அவனுடைய சபையில் தமிழரும் ஆரியருமாகிய மூதறிஞர் பலரும் இருந்தனர். அவருள் அங்கதேய அரசனாகிய கன்னன் தமிழரது தன்னயமற்ற நடுநிலைமைக்கு எடுத்துக் காட்டாவன்.

---

Pandavas. "Here is then Draupathi approaching with eyes like a lotus petal and with a lusterous dark complexion resembling the colour of the black lotus. By her side is Subathirai who is fair as gold. Here is another wife of Arjuna being the daughter of Naga King fair as pure as gold. Here is also Chitrangada daughter of the Pandava King whose complexion is like the colour of a madhuka flower. Herc is the chief wife of Bhima with complexion as dark as a garland of blue lotus. By her side is the wife of nagula dark as a blue lotus" (Asramavasi Parva)-Epic India - C. V. Vaidya, M. A. LL. B.

காந்தார இளவரசனுகிய சகுனி தன்னயமுடைய ஆரியரின் குணத்துக்கு உதாரணமாவன். இவ்வகையான கலப்பு மணங்களாலும், அவைகளால் ஏற்பட்ட உறவாலும் முற் கால ஆரியர் தமிழ்நாட்டில் உபசரிக்கப்பட்டனர். குருச் சேத்திரத்தில் வாழ்ந்த ஆரியர்களுக்கு வீடுகள் அளிக்கப் பட்டன. காலச் செலவில், குடியேறிய ஆரியருக்கும் தமி ழருக்கும் ஒரேவகை உரிமைகள் வழங்கப்பட்டன. இத ஞல் இருசாதியினரும் ஒருசாதியினராகக் கலந்துவாழும் வாய்ப்பு உண்டாயிற்று. தாம் வென்று கைப்பற்றிய கோசல நாட்டிற் போலவே, ஆரியர் அத்தினபுரத்திலும் வாழத் தலைப்பட்டனர். இவ்வாறு சேர்ந்து நடத்தப்பட்ட வாழ்க்கையினுல் மொழி, சமயம், பழக்க வழக்கம் ஆகியன வும் கலந்தன. ஆரியர் தமிழரிடமிருந்து கற்றுக்கொண்ட அநேக தமிழ்ச்சொற்கள் ஆரியமொழியிற் காணப்படுகின் றன. இரு பிரிவினரும் கலந்து வாழ்ந்தார்கள் என்பதற்கு இஃது அறிகுறியாகும்.

## ஆரியரின் நூல்கள் ஒளி பெறுதல்

குருபாஞ்சாலர், பாண்டவர் ஆதியோர் சிவனை வழிபட் டனர். அவர்களுக்குப் பின் வந்த அரசர் ஆரியரின் ஆதிக் கத்தால் கடவுள் * பத்தியிற் றளர்ந்தவர்களாயினர். அவர் கள் ஆரியரின் தெய்வங்களைத் தமது கடவுளர்களாகக் கரு

* பத்தி என்பதற்கு மூலம், பதி (பதிதல்.) ஆகவே பத்தி என்ப தைப் பக்தி என்று எழுதுதல் தவறுடைத்து. பழைய நூல்களில் பத்தி என்னும் வழக்கே உண்டு. சக்தி, பக்தி என்பன வடமொழியை அபிமானிப்பார் சிலரால் கொண்டு வரப்பட்ட புதிய வழக்கு. சத்தி என்பதற்கு மூலம் சத்து. சத்தியைச் சக்தி எனின், பொருளின் றும். கழுதை மயிர் பிடுங்கித் தீர்த்தமாடிய கதைபோல் குருட்டுத்தன மாகப் பழைய சொற்களின் உச்சரிப்புக்களை மாற்றுதல் தகுதியற்ற செயலாகும்.

தியதோடு யாகங்களிலும் நம்பிக்கை கொண்டனர். இக் கொள்கைகள் இவர் முன்னோரால் கடியப்பட்டவை.

இதுவரையும் ஆரியர் தமிழரோடு கலப்புற்ற வகையினைக் கூறினோம். இனிச் சனமேசயன் காலத்தில் ஆரியரின் நூல்கள் ஒளி அடைந்த வகையினைக் கூறுவோம். பஞ்சாப்பில் வாழ்ந்த ஆரியர் புரிந்த யாகங்கள் ஆடம்பரமில்லாமல் இருந்தன. பெரிய விருந்து கொண்டாடுவதற்காக அசுவ யாகங்கள் செய்யப்பட்டன. ஆடம்பரத்தோடு கூடிய யாகங்கள் அரசர் அரண்மனைகளிலும், கங்காநதிப் பள்ளத் தாக்கிலுள்ள நாடுகளிலும் நடைபெற்றன: அசுவமேத யாகம் பாவத்தைப் போக்கி அரச பதவியை அளிக்குமென நம்பப்பட்டது. முன்னோருடையவும் தன்னுடையவும் பாவங்களைப் போக்குதற்குச் சனமேசயன் யாகங்களைச் செய்தான். யாகங்களைப் புரியும் விதிகளைக் கூறும் பெரிய நூல்கள் எழுதப்பட்டன. இவைகள் திரட்டப்பட்டுப் பிராமணங்கள் என்னும் பெயரைப்பெற்றன. பிராமணங்கள் சனமேசயன் காலத்திற் றோன்றினவாகும். மாபாரதமும் இவன் காலத்திற் செய்யப்பட்டது வைசம்பாயனர் சனமேசயனுக்குப் பாரதப்போர் வரலாற்றினைக் கூறினர். பாரதஞ்செய்தவர் கிருட்டிண வியாசர் என்பது நம்பத் தக்கதா யில்லை. வியாசரின் புகழை நிலை நாட்டுதற்கு அவர் மாணாக்கர் சிலர், அவர்பெயரால் வேதங்களைத் தொகுத்தும் மாபாரதத்தை இயற்றியும் போந்தார்கள் என்று கருத இடமுண்டு. இவ்வாறு செய்தல் அக்கால மரபு. கிருட்டிண வியாசர் என்னும் பரத வகுப்பினர், வேதங்களைத் திரட்டினவரும் மாபாரதத்தைச் செய்தவருமா யிருந்தால், அவர் காலம் மாபாரதத்துக்குப் பிந்தியதா யிருத்தல் வேண்டும். மாபாரதம் ஒருவரால் ஒரு காலத்துச் செய்த நூலாகக்

காணப்படவில்லை. "பிற்காலப புலவர்களும் தாம் பாடிய பாடல்களைப் 'பாரதத்துட் சேர்த்து அதனைப் பெரிதாக்கி யிருக்கின்றனர். பிற்காலத்தைய ஒவ்வொரு கொள்கைக்கு உரியோரும் தத்தம் கொள்கைகளை நூலிற் புகுத்தி யிருக்கின்றனர். குரு பாண்டவர் யுத்தத்துக்குப் பிற்பட்ட கிருட்டிண வணக்கம் புகுத்தப்பட்டிருக்கின்றது," எனத் தத்தங் கூறி யிருக்கின்றனர் *

மாபாரதம் எழுதப்பட்டது மாத்திர மல்லாமல் வேதங்களின் தொகுப்பும் சனமேசயன் காலத்தில் நிகழ்ந்திருத்தல் கூடும். இத்தொகுப்புக்கள், ஆரியர் சிந்துநதி தீரத்திற் குடியேறியது முதல், யாகங்கள் ஆடம்பரத்தோடு செய்யப்பட்டது வரையிலுள்ள காலத்தைக் குறிப்பிடுகின்றன. தமிழர் கடவுட் பூசைகளில் தோத்திரப் பாடல்களைப் பாடுதல் மரபு. ஆகவே ஆரியரின் யாக சாலைகளிலும் துதிபாடும் முறை கொண்டுவரப்பட்டது. இருக்கு வேதத்தினின்றும் தெரிந்தெடுத்த பாடல்களோடு சில பாடல்களையும் சேர்த்த தொகுதிக்குச் சாமம் என்று பெயர் இடப்பட்டது. இருக்கு வேதத்தினின்றும் எடுக்கப்பட்ட கிரியைகளிற் படிக்கும் மந்திரங்களோடு வேறு சிலவற்றைச் சேர்த்த தொகுப்புக்கு யசுர் என்று பெயரிடப்பட்டது. இவ்விரண்டும் இருக்கு வேதத்தோடு சேர்த்துத் 'திரயம்' என்று வழங்கின. சாம வேதத்தின் இசை வகுப்புக்கு ஆரியர், தமிழ் இராவணனுக்கு மிகவும் கடமைப்பட்டவர்களாவர்.

அதர்வணம் அல்லது கடைசியாகச் செய்யப்பட்ட வேதம்; பல மந்திரங்களின் தொகுப்பையுடையது. அம் மந்திரங்கள் இந்திய நாட்டின் பல பாகங்களினின்றும் திரட்டி ஆரியமொழியில் எழுதப்பட்டனவாகும். சனமேசய

* Ancient India P-120.

னுடைய தந்தை பரிச்சித்து சர்ப்பந்தீண்டி இறந்தான். சர்ப்பங்களை ஒழிக்கக் கருதிய சனமேசயன், இந்திய நாடு முழுமையிலுமுள்ள மந்திரவித்தைக்காரரை அழைத்து அவர்கள் வாயிலாகச் சர்ப்பயாகஞ் செய்தான். அக்காலத்தில் அதர்வண வேதமென்பது நூலாகச் செய்யப்பட்டது. இத் தொகுப்புநூல், பிற்காலத்தில் ஒரு நூலாகக் கொள்ளப்பட்டு வேதங்கள் நான்கு என்னும் வழக்கு உண்டாயிற்று. இவ்வாறு சனமேசயனுடைய ஆட்சியில் ஆரியர் இலக்கியங்களுக்கு மதிப்பு உண்டாயிற்று.

## பிராமணர்

சனமேசயனுடைய ஆளுகை பாரதப் போருக்கு ஒரு நூற்றாண்டு பிற்பட்டது. ஆரியர் கங்காநதி வெளிகளில் குடியேறிய நூறு ஆண்டுகட்குள் அவர்கள் மிக முன்னேற்றமடைந்தனர். அக்காலத்தில் கட்டுப்பாடான சாதிப் பிரிவினை உண்டாகி யிருக்கவில்லை. மனுவின் நீதிநூலும் தோன்றவில்லை. மக்கள் இராசாயனர், வைசியர் என்னும் இருபிரிவினரா யிருந்தனர். இராசாயனர் நாட்டை ஆள்பவர்களா யிருந்தனர். அவர்கள் ஒரு காலத்தில் அசுரர் என்று அழைக்கப்பட்டனர். பஞ்சாப்பில் வாழ்ந்த பழைய ஆரியர் மொழியில் அசுரர் என்பதற்குப் பிரபுக்கள் என்பது பொருள். இவர்கள் அல்லாத மற்றவர்கள் வைசியர் என்றழைக்கப்பட்டனர். பஞ்சாப்பில் குடியேறிய எல்லோருக்கும் இது பொதுப்பெயராக விருந்தது. புதிய காரணங்களால் மக்கள் புதிய கடமைகளைச் செய்யும் கட்டாயம் நேர்ந்தது. ஆகவே ஆரியருக்குள் பல வகுப்புக்கள் தோன்றின. பிராமணங்களை நன்கு பயின்றோரும், யாகக் கிரியைகளைப்புரியும் திறமையடைந்தோரும், பிராமணர் எனப்பட்டனர். பிராமணர் யாகக் கிரியைகளைச் செய்தனர். அது

னல் அவர்கள் நிரம்பிய பொருள் பெற்றனர். அரசர்களும் செல்வரும் தமது செல்வங்கள் எல்லாவற்றையும் யாகம் என்னும் பெயரால் இக்கூட்டத்துக்கு இறைத்தனர். பிரா மணங்களின் அறிவைக்கொண்டு அவர்கள் மிகுந்த பொருள் திரட்டியபோதும் பயனற்ற இக்கிரியைகளாற் திருப்தி யுறுமற் பலர் உண்மை ஞானத்தைத் தேடி அதனைப்பெற முயன்றனர்.

## பிராமண வகுப்பினர், தமிழ் அரசரிடம் உண்மை ஞானத்தைக்கேட்டு அறிதல்

சனகனுடைய அரண்மனையிலேயே சதபதப் பிராம ணம் ஆரம்பிக்கப்பட்டது. தமிழருடைய பழைய கதை களும், சமயக் கொள்கைகளும் ஞானமும், பெரிய வெள் ளப் பெருக்கோடு தொடர்புடைய மனுவின் வரலாறும், மறு பிறப்புப் பேரின்பம் முதலிய உண்மைகளும் இந்நூ லகத்தே காணப்படுகின்றன. இவை எல்லாம் ஆரியர் அறி யாத பொருள்கள். இவை முதன்முறையாகச் சதபதப் பிரா மணத்திற் காணப்படுகின்றன. சதபதப் பிராமணம் யாக் ஞவல்கியாற் செய்யப் பட்டது.

காசி அரசனாகிய அபத சத்துரு, சனகனைப்போலக் கல்வியறிவுடையவனும் கல்வியை ஆதரித்தவனுமாவன் என்று கோசிதகி உபநிடதங் கூறுகின்றது. கிரகபாலகி என்னும் கல்வியறிவுடைய பிராமணன் அபத சத்துரு விடம் வந்து, "நான் உனது மாணக்கனாக வரட்டுமா" எனக் கேட்டான். அரசன், "இராசாயனனுக்குப் பிரா மணன் மாணாக்கனாயிருத்தல் முறையல்ல;வேண்டியவற்றைக் கேள் விளக்குகிறேன்" என்றான். யாக்ஞவல்கியைப்போல் மதிக்கப்பட்ட பிராமணருள் கௌதமர் அல்லது உடலகர் என்பவர் ஒருவர். இம்முனிவர் ஆரிய ஞானிகளுட் சிறந்

தவர் எனக் கருதப்பட்டனர். இம்முனிவர் இராசாயன ரிடமிருந்து நேர்மையாகவும் உறுதியாகவும் ஞானத்தைக் கற்ருரென்று உபநிடதங்கள் பலவிடங்களில தெளிவாகக் கூறுகின்றன. உபநிடதங்களின் பகுதிகள் இராசாயனர் அல்லது தமிழர் ஞானமுடைய குரவர்களென்றும், மதி நுட்ப முடையவர்களென்றும் கூறுகின்றன. பிராமணர் இவர்களிடமிருந்தே ஞானத்தைப் பெற்றனர். சாந்தோக் கிய உபநிடதத்தில் காணப்படும் வரலாறு, அதனை வலி யுறுத்துகின்றது. மேலே கூறப்பட்ட கௌதமர், இராசா ணுச பிரவாகனனுல் வினுவப்பட்ட ஐந்து கேள்விகளுக்கு விடை அறியாது, பிரவாகனன் வாயிலாகவே விடைகளைப் பெற்றனர். பிரவாகனன் விடை அளிக்கும்போது, “உனக்குச் சொல்வதன்முன் இந்த ஞானம் பிராமணன் எவனுக்கும் அளிக்கப்படவில்லை. அதனை உபதேசிக்கும் உரிமை இவ்வுலகில் இராசாயன வகுப்பினருக்கே உரிய குரு நாட்டிலும், வென்று கைப்பற்றிய கோசலநாட்டிலுமே பெரும்பாலும் ஏற்பட்டது” எனக் கூறினுன்.

கங்கைக் கரைகளில் வாழ்ந்த தமிழ் அரசர்களின் அரண்மனைகளில் பிராமணரின் எத்தனங்கள் பயனளிக்க வில்லை. அங்குப் பிராமணர் மதிக்கப்பட்டிலர்; பிரா மணங்களும் கவனிக்கப்பட்டில. முற்காலத்தில் ஒவ் வொரு தமிழரசனது அரண்மனையிலும் அறிஞர் அவை ஒன்று இருந்தது. அக்கால இலக்கியங்கள் தமிழர சரின் அரண்மனைகளிலிருந்த அறிஞர் சபைகளைப்பற்றி அடிக்கடி குறிப்பிடுகின்றன. பிரதானமாகக் காசி அரசன் அயாத சத்துரு, பாஞ்சால அரசன் பிரவாகனன், விதேக அரசன் சனகன் முதலியோரின் சபைகள் கூறப்படுகின்றன. இவர்களுள் இராசாயனனுகிய சனக

னது அரண்மனையிலிருந்தவர்களே முக்கிய முடையவர்கள். சனகன் சாத்திர ஞானவானும் ஆசாரியனுமாவான். தமிழரின் உண்மையான தத்துவ ஞானங்களடங்கிய உபநிடதங்களுக்குப் பெருமை அளித்தவன் இவனுவன். வேறு நாடுகளிலிருந்தும் பல அறிஞர் இவனது அரண்மனைக்கு உண்மை ஞானத்தை விசாரித்தறியச் சென்றனர். அவருள் யாக்ஞவல்கி என்னும் பிராமணர் ஒருவர் இங்குக் குறிப்பிடத் தக்கவராவார். சனகன் இவருக்கு உண்மையான தத்துவ ஞானத்தைப் போதித்தார். யாக்ஞவல்கி தத்துவ ஞானமில்லாத ஆரிய மதத்திலிருந்து தத்துவ ஞானமுடைய தமிழ் மதத்துக்குத் திருப்பப்பட்டார்.

யாக்ஞவல்கி இரண்டு பிராமணர்களுடன் சனகனிடஞ் சென்றார். சனகன் அக்கினி கோத்திரம் செய்யும் முறை யாதென வினவினன். யாக்ஞவல்கியின் விடை ஓரளவு சரியாக விருந்தது; முற்றும் சரியாக இருக்கவில்லை. மற்ற இருவரும் கூறிய விடைகள் பிழையாக விருந்தன. அதன் மேல் சனகன் அக்கினி கோத்திரத்தைப்பற்றி விளக்கினன்; விளக்குதலும் யாக்ஞவல்கி, தன் குருவாகிய பிருகுவின் உபதேசங்களில் திருப்தி அடையாதவராய் அவரிடம் கற்றவைகளை எல்லாம் சத்தி எடுத்தார். அவர் சத்தி எடுத்தது கிருட்டின யசுர் வேதத்தை. பின்பு அவர் தம் குருவை விட்டு நீங்கிச் சூரியனை யடைந்து சுக்கில யசுர் வேதத்தைக் கற்றார். இவ்வாறு சதபதப் பிராமணங் கூறுகின்றது. சூரிய னென்றது தமிழாசிரியனைக் குறிக்கும். இதனுல் ஆரியர் பல தெய்வக் கொள்கையை விட்டுத் தமிழருக் குரிய ஒரு தெய்வக் கொள்கையைப் பின்பற்றினர் என்று விளங்குகின்றது. கடவுள், உயிர்களின் இயல்புகள், எவ்வெவை என்று எவ்விடங்களிலும் விவாதிக்கப்பட்டன. கடவுள் எங்கும் நிறைந்திருக்கின்றா ரென்பது தமிழ் மக்களின்

கொள்கை. இறைவன் எல்லாப் பொருள்களினும் செறிந்திருக்கிறு ரென்றும், அவருக்குள்ளே தோற்றம் ஒடுக்கம் ஆதியன என்றும் கூறப்பட்ட உண்மை, கடவுள் எல்லாப் பொருளும் ஆகின்ருரென்றும், ஒவ்வொரு பொருளும் கடவுளின் பகுதி யென்றும் பிற்காலத்தில் திரிபு பெற்றது.

தமிழரின் ஞானத்தை எடுத்துக் கூறும் உபநிடதங்கள் அக்கால ஆரிய நூல்களுள் சிறந்து விளங்கின. உபநிடதங்கள் தோன்றியபின் பிராமணரின் நூல்கள் மங்கத் தொடங்கின. இவ்வாருதற்கும், ஆரியர் தமிழர் மதத்தைத் தழுவுவதற்கும் காரணரா யிருந்தவர் சனகரே யாவார். அவர் அரசருக் கெல்லாம் அரசராய் விளங்கினுர். அதற்கு அவர் உண்மை ஞானமே காரணம்.

## சனகனின் காலம்

சனகன் அரசாண்ட காலம் இன்னதென்று நினைவில் வைத்திருத்தல் நன்று. இவர் சகேதாவில் அரச பரம்பரையைத் தொடங்கிய இரகுவின் பேரனுகிய தசரதன் காலத்தவர். சனகன் காலத்தில் பரிச்சித்துவின் பரம்பரை மறைந்துவிட்டது. ஆனுல் அவ் வமிசத்தைப் பற்றிய ஞாபகம் மறைந்துவிடவில்லை. யாகங்கள் வாயிலாகப் பரிச்சித்துவின் வமிசத்தவருடைய பாவங்கள் போகப்பட்டன. இது சனகன் காலத்தில் ஆச்சரியப்படத்தக்கதும் தர்க்கத்துக் குரியதுமா யிருந்தது.

யாக்ஞவல்கியின் எதிர்க்கட்சியினர் ஒருவர் யாக்ஞவல்கியை நோக்கிப், பரிச்சித்துக்கள் சென்றுவிட்டார்களா? என்னும் கேள்வியைக் கேட்டார். அவர்களின் அசுவமேதம் இப்பொழுது எங்கே போய்விட்டது? என்று யாக்ஞவல்கியர் மறுமொழி கூறினுர். பரிச்சித்துக்கள் என்

றது அவர்கள் காலத்து நூல்களே. இதனால் பிராமணங்களின் காலம் * உபநிடத காலத்துக்கு முற்பட்டது என விளங்குகின்றது. சனகன், பிராமணரை ஆதரித்த சனமேசயன் காலத்துக்குச் சில ஆண்டுகள் பிற்பட்டவன் எனக் கூறலாம். பாரதப் போருக்குப் பிற்பாடு பரிச்சித்துவுக்குப் பின் வந்தவன் சனமேசயன். ஆகவே, இவன் காலம் § கி. மு. 14-ம் நூற்றாண்டின் பிற்பகுதி யாகும். ஆகவே சனகன் கி. மு. 13-ம் நூற்றாண்டின் முற்பகுதியில் இருந்தவனாவன். சகேதாவை ஆண்ட ஆரிய அரசருள் தசரதன் கீர்த்தி வாய்ந்தவன். கங்காநதி தீரத்தில் ஆட்சி புரிந்தவர்களுள்ளும் இவன் சிறந்தவனாவன். இவன் தமிழ் அரசனாகிய சனகனோடு சம்பந்தப்பட்டவன் என்று அறிகின்றோம்.

* உபநிடதம் என்பதற்குக் கிட்ட இருந்து கேட்கப்படுவது (குருமாணாக்க முறையில் உபதேசிக்கப்படுவது) என்பது பொருள். இது நூல்களாக எழுதப்படாமல் குருமாணாக்க முறையில் தமிழ் மக்களிடையே வழங்கிற்று. இது ஆரியர் வேதங்களைப் போலப் பெண்களுக்கும் சூத்திரருக்கும் மறைக்கப்படுவது அன்று. பெண்களும், அரச வகுப்பின ரல்லாத பிறரும் உபநிடத ஞானங்களிற் சிறந்து விளங்கினார்கள். இதனாலும் இவை தமிழருக்கே உரியன என்பது வெளிப்படை.

§ மாபாரதம் 5000 ஆண்டுகளுக்கு முற்பட்ட நிகழ்ச்சி எனப் படுகின்றது. இது கி. மு. 14-ம் நூற்றாண்டில் நிகழ்ந்ததென்று ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர். இது கிட்டத்தட்டச் சரி என்று சொல்வதற்குரிய ஆதாரங்கள் சில உள. மகதநாட்டு அரசனாகிய பிம்பசாகரன், புத்தர் காலத்தவன். அவன் பாரதப் போரில் கலந்து கொண்ட யுரசந்தாவுக்குப் பின் 52-வது அரசனாவன். புத்தர் காலம் கி. மு. 5-ம் நூற்றாண்டு. 51-அரசரின் ஆட்சிக் காலத்துக்கும் ஓர் அரசனுக்கு 20-ஆண்டு ஆட்சிக்காலம் என வைத்துக் கணக்கிட அது பாரதப் போரைக் கி. மு. 15-ம் நூற்றாண்டிற் கொண்டு போய் விடுகின்றது. எவ்வகையிலாவது பாரதப்போர் கி. மு. 14-ம் நூற்றாண்டுக்குப் பிற்பட்டதன்று எனச் சாதிக்கலாம்.

## ஆரியவர்த்தம்

தசரதனின் புத்திரன், சனகனின் ஒரே புதல்வியை மணந்ததால், தமிழர் ஆரியர் என்னும் இரண்டு வமிசங்களுக்கும் இடையில் உறவு ஏற்பட்டது. குலகுருவாகிய வசிட்டரின் அநுமதியைப் பெற்ற தசரதன், தனது புதல்வன் இராமனை விசுவாமித்திரர் * என்னும் முனிவரிடம் ஒப்பித்தான். கோசலம் விதேகம் என்னும் இரண்டு இராச

---

* விசுவாமித்திர வசிட்ட குடும்பங்களுக் கிடையில் நீண்ட பகை யிருந்த தென்பதற்குப் பல கதைகளுள. விசுவாமித்திர குடும்பத்தினர், 'பரதரின் புதல்வர்' என்றும், 'பரதரில் சிறப்புடையர்' என்றும் வேதங்கள் கூறுகின்றன. விசுவாமித்திர குடும்பத்தினர் விரித்த சடையுடையவர்கள் என்றும், வசிட்ட குடும்பத்தினர் வலப் பக்கத்தே முடிந்த கொண்டையுடையரென்றுஞ் சொல்லப்படுகின் றனர். வசிட்டர் "ரித்றஸ்" என்னும் ஆரிய வகுப்பினராயினும் அவர்கள் சூத்திரரென்று சொல்லப்படுகின்றனர். வசிட்ட குடும்பத்தின் முன்னோராகிய 'ரித்றஸ்' வகுப்பினர் ஆரியரில் உயர்ந்தவர்களா யிருந்தபோதும் வசிட்ட குடும்பத்தினர் சூத்திரர் என்னும்படியான கீழ்நிலை அடைந்தனர். பிற்காலப் புராணங்கள் விசுவாமித்திரரைச் சத்திரியரென்றும் வசிட்டரைப் பிராமணரென்றும் கூறுகின்றன. சத்திரியன் பிராமணன் என்னும் பதங்கள் முறையே தமிழரையும் ஆரியரையும் குறிக்கின்றன. வசிட்டர் பிராமணரின் நட்பைப் பெற்று அவர்களாற் பாராட்டப்பட்டார்; அவர்கள் வணக்கம் கூறி அவருக்குப் பல பெருமைகளைக் கொடுத்தனர். அவர்களிடத்தில் தரும சிந்தை கிடையாது. அவர்கள் விசுவாமித்திரர் மீது பல பழிகளைச் சுமத்தினர். விசுவாமித்திரர் அவர்களின் சத்துராதியாக விருந்தார். விசுவாமித்திர வம்சத்தவர்கள் பிறப்பிற் றமிழர் அல்லது பரதர். வசிட்ட குடும்பத்தினர் 'ரித்றஸ்' வகுப்பினர். அக்காலத்தில் தமிழரசர் மேலான அதிகார முடையவர்களா யிருந்தனர். ஆகவே பிறப்பிலும் படிப்பிலும் விசுவாமித்திர வம்சத்தினர், ஆரியர் இல்லங்களிலும் வணக்கத்தோடு போற்றப்பட்டனர். இது வசிட்ட குடும்பத்தினருக்குப் பொறாமையை மூட்டிற்று. இப் பொறாமை காரணமாக, ஒருவர்மீது ஒருவர் பழிகளைச் சுமத்தினது மல்லாமல் சண்டையிட்டும் கொண்டனர். கல்வியிலும் உடல் வலியிலும் விசுவாமித்திர குடும்பத்தினர் வசிட்ட குடும்பத்தினரிலும்

குடும்பங்களின் இணைப்புப் பன்னிரண்டாம் நூற்றாண்டுக்கு முன் ஒன்றுபட்டுவிட்டது. ஆரியர் பஞ்சாபிலிருந்து வந்து குடியேறியபின், பஞ்சாப்பிற்குக் கிழக்கு, சோணை ஆற்றுக்குத் தெற்கு, அராவலிமலைக்கு வடக்கு அதன். கிழக்கேயுள்ள 'பிரியற்று', (Pryatra) முதலிய எல்லைகளுக் குட்பட்ட நாடுகளில், இரண்டு சாதிகளுக்கு மிடையில் ஒரு வேற்றுமையும் இல்லாமல் மறைந்துவிட்டது. மேற்குறித்த எல்லைக் குட்பட்ட நாட்டைப் பிற்காலத்தார் ஆரியவர்த்தம் என்று அழைத்தனர். இக் கலப்புச் சாதியார் மிகுந்த சீர்திருத்த மடைந்த பின்பு, ஆரியர் முதன்முதற் குடியேறிய நாடாகிய பஞ்சாப்பை முற்றாக மறந்துவிட்டனர். ஆரியவர்த்தம் என்பதில், பஞ்சாப் சேர்க்கப்படவில்லை. ஆரியர் குடியேற்றத்தின்பின் தோன்றிய இரண்டாவது கால நூல்களாகிய பிராமணங்கள், ஆரணியங்கள், உபநிடதங்கள், ஆரியவர்த்தத்தைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளன.

## பிராமணர் தென்னாட்டை அடைதல்

ஆரியர் இவ்வாறு தமிழ்மய மானபின் அவர்கள், உபநிடதத்திற் கூறும் தத்துவ ஞான ஆராய்ச்சியில் ஆவல் கொண்டவர்களாய், ஞானத்துக்குப் பிறப்பிடமாகிய தென்னிந்தியாவுக்கு யாத்திரை செய்தனர். இவர்கள் தமிழ் அறிஞராலும் அரசராலும் வரவேற்கப்பட்டனர். ஆகவே அவர்கள் தமிழ் அரசரின் அரண்மனையை அலங்கரித்த அந்தண ஆசாரியர்களிட மிருந்து தமிழ் ஞானத்தைக் கற்றனர். ஆரியர் தமிழரோடு இவ்வகையான உறவுவைக்கத்

---

பார்க்க அதிக வலிமையைப் பெற்றிருந்தனர். ஆகவே தசரதனது அரண்மனையில் விசுவாமித்திரர்கள் மிக்க செல்வாக்குப் பெற்றிருந்தனர்.

தொடங்கிய பின்னர் § 'சூத்திர' இலக்கியங்கள் எழுதப் பட்டன. அவ் விலக்கியங்கள் பலவற்றின் பிறப்பிடம் தென்னிந்தியா வாகும். இதுவரையும் வசன நடையில் எழுதப்பட்ட ஆரியரின் இலக்கிங்கள், இப்பொழுது செய் யுள் நடையில் எழுதப்படலாயின. இம்முறை தமிழரைப் பின்பற்றிச் செய்யப்பட்ட தென்பதைச் சூத்திர இலக்கியங் களைப் பார்த்து அறியலாம். * வடக்கே உள்ளவர்களுக் கும், தெற்கே உள்ளவர்களுக்கு மிடையில் கி. மு. 10-ம் நூற்றாண்டு முதல் இவ்வகையான உறவு ஏற்பட் டதை அறிகின்றோம். தெற்கே வந்த பிராமணரிற் பெரும் பாலோர், தமது நாட்டுக்குத் திரும்பவில்லை. ஆகவே அவர் கள் தென்னாட்டிற் றங்குவாராயினர். தமிழ் அந்தணரின் மாணாக்கராகத் தென்னாட்டிற் றங்கிய ஆரியப் பிராமணர் அந்தண வகுப்பினரோடு கலந்தனர். தென்னிந்தியாவிற் காணப்படும் பிராமணரிற் பெரும்பாலோர், தமிழர் என்பதிற் சந்தேகமில்லை.

---

§ சூத்திரப்பாவினு லாக்கப்பட்ட நூல்கள்.

* ஆரியப் பிராமணருக்கு ஞானம் போதித்த இராசானுசர், பகவத் கீதையின் ஆசிரியராகிய கண்ணன், கீழ்த்திசையில் ஞானத்தை உதிப்பித்த புத்தர் ஆகியோர் தமிழ் மரபினரே. உபநிடதங்கள் எழுதப்படுகின்ற காலத்தில், தத்துவஞானங்களை விசாரித்தறிவதற்குப் பிராமணர் தெற்கே வந்தார்கள். அதன் விளைவாக உபநிடதங்களுக் குப்பின் எழுதப்பட்ட சூத்திர வடிவமான நூல்கள், தென்னிந்தியா வில் எழுதப்பட்டன. சூத்திரங்களுக்கு உரை எழுதிய போதா யனரும், அபத்தம்பரும் முறையே கி. மு. 5-ம், 6-ம் நூற்றாண்டு களில் விளங்கியவர்களாவர். அவர்கள் கோதாவரி கிருட்டிண ஆறு களுக்கு இடையே யுள்ள ஆந்திரதேசக் கலைஞானக் கொள்கைகளைப் பின்பற்றிய தமிழர். இவ்வாறு தமிழரே பெரிதும் வடமொழி நூல்களின் ஆசிரியர்களாவார்.

## இராமாயணம்

தெற்கே முதல் முதல் அடி எடுத்து வைத்த ஆரியன், இராமன் என்று நாங்கள் படிக்கின்றோம். இக்கொள்கை ஐயத்துக்கு இடமானது. இராமன் சனகன் காலத்தவனாயின், இராமாயணம் கி. மு. பதின்மூன்றாம் நூற்றாண்டுக்கும் ஐந்தாம் நூற்றாண்டுக்கும் இடையில் எழுதப்பட்ட நூலென்பதிற் சந்தேகமில்லை. தென்னிந்தியப் பழங்கதை ஒன்றை எடுத்துக்கொண்டு, அதனோடு கோசல தேசத்து இராமனையும் பிணைத்து இராமாயணம் செய்யப்பட்டிருக்கின்றதெனத் தெரிகின்றது. அந்நூலாசிரியர் வடக்கேயிருந்த தசரதனையும், சனகனையும் ஒரே காலத்தவர் ஆதலை வைத்துக்கொண்டு, தென்னாட்டு இராவணன் அகத்தியர் முதலியோர் காலங்களையும் இடங்களையும் கவனியாது நூல் செய்திருக்கின்றார். அகத்தியர், ஆரியர் சிந்துநதியின் மேற்குக் கரையில் வந்து குடியேறுவதன் முன் வாழ்ந்தவராவர்.

## ஆரியரின் கடவுளர்

முதலிற் பஞ்சாப்பில் குடியேறிய ஆரியர், எப்படித் தமிழரோடு கலந்து கொண்டார்கள் என்று சரித்திர சம்பந்தமாக அறிந்துகொண்டோம். இரண்டாவதாக இவர்கள், பல காரணங்களாற் கிழக்குத் திசையாகச் சென்று, கங்கா நதிப் பக்கங்களில் வாழ்ந்த தமிழர் அல்லது பரதரோடு எப்படிக் கலந்தார்களென்று அறிந்தோம். சரித்திர சம்பந்தமான ஆராய்ச்சியை விட்டு இனிச் சமயம், மொழி என்பவற்றை ஆராய்வோம். ஒரு சாதியாரின் பழைய வரலாற்றை அறிந்துகொள்வதற்குச் சமய ஆராய்ச்சியும், மொழி ஆராய்ச்சியும் நம்பிக்கையான ஆதாரங்களாக விருக்கின்றன.

இரண்டாவது குடியேற்றக் காலத்தில் கலப்பு ஆரியர், தமிழரின் நியாயமுறையான சமயத்தைத் தழுவினார்கள் என அறிந்தோம். அவர்களின் சமய மாற்றம் சடுதியாக ஏற்பட்டதன்று. அக்கால நிலைமைக்கேற்பச் சிறிது சிறிதாக ஏற்பட்டாலும் உறுதியாக விருந்தது. பஞ்சாப்பில் ஆரியர் குடியேறிய காலம் முதல் வேதபாடல்களில் தமிழ்க்கொள்கைகள் நுழைந்திருக்கின்றன. இருக்குவேதத்தில், பழைய தெய்வங்களும் வருணனும், மித்திரனும் (இரவும் பகலும் அல்லது இருண்டவானமும், ஒளியுடையவானமும்) வழிபடப்பட்டன. ஆரியர் இந்தியாவை அடைவதன்முன் வாழ்ந்த பூர்வ ஆரியநாட்டில், இத்தெய்வங்கள் வழிபடப்பட்டன. பழைய ஆரியர் வானத்தையும், அது அடையும் பல மாறுதல்களையும் பல தெய்வங்களையும் வழிபட்டனர். இந்திய நாட்டை அடைந்த ஆரியர், தமிழரின் ஒரு தெய்வ வழிபாட்டைக் கண்டனர்; கண்டு, இந்திரனை எல்லாத் தெய்வங்களுக்குந் தலைவனாகக் கொண்டனர். இந்திரன் எல்லாத் தெய்வங்களுக்கும் தலைவனாகவும் கொள்ளப்பட்டான். இந்திரன் என்னும் சொல் இறைவன் என்னும் தமிழ்ச் சொல்லின் உச்சரிப்பு வேறுபாடாக விருக்கலாம்.

## ஞாயிற்று வணக்கம்

அவர்கள் தாங்கள் புதிதாகப் பழகிய பரதர் அல்லது தமிழரிடமிருந்து சூரிய வணக்கத்தையும் கைக்கொண்டனர். சூரிய வணக்கத்துக்குரிய காயத்திரி பாடல்களைச் செய்தவர்கள் பரதரில் சிறந்தவர்கள் எனப்பட்ட விசுவாமித்திரர்களே. பஞ்சாப்பிலுள்ள மல்தான் (Maltran) என்னும் நகரில் சூரியனுக்குப் பழைய கோயில் ஒன்று இருந்தது என அறிகின்றோம். ஔரங்கசீப் என்னும் மகமதிய மன்னனின் கட்டளையால், அவ்வாலயத்தில் இருந்த தங்க உருவம் உருக்

-கிக் கருவூலத்தில் சேர்க்கப்பட்டது. மல்தான் என்னும் இடம், மல்லர் அல்லது மள்ளர் இருப்பிடமாயிருந்தது. இந்தியாவின் மேற்குப் புறத்திலே மள்ளர் முக்கிய சாதியினராவர். தமிழரின் ஒரு பிரிவினராகிய இவர்கள் மல்தான், மர்வ மல்வ என்னும் எல்லைகளுக்குட்பட்ட நாடுகளிலும் இராசபுத்தானவிலும் காணப்பட்டனர். பள்ள என்பது மள்ள என்பதன் உச்சரிப்பு வேறுபாடு. சௌராட்டிரத்தில் வாழும் சாதியினருக்கு இப்பெயர் வழங்கும். அங்குச் சூரிய வழிபாடும், அவ்வழிபாட்டுக்குரிய பல ஆலயங்களு மிருந்தன.

ஆதிகாலந் தொட்டுத் தமிழருக்கிடையில், சிவ வணக்கைப்போலவே சூரியவணக்கமும் இருந்தது. தத்துவ ஞானத்தை அறிவதன்முன் அவர்கள் சூரியனையே வணங்கினார்கள் எனலாம். எல்லம் என்பது அக்காட்டில் (மேற்கு ஆசியா) உள்ள கட்மீரு (Cadmira) என்னும் இடம். தமிழர் சென்று குடியேறிய நாடு இது. அங்கே பேபெல் (Babel) என்னும் இடம், சூரியன் கோயிலுக்குப் பேர் போனது. பேபெல் என்பதற்குக் கடவுளின் வாயில் என்பது பொருள். ஆகவே கட்மீரா என்னும் நகரம் பேபெல் என்னும் பெயரைப் பெற்றதோடு, பேபெல் என்னும் கோயிலின் பெயரிலிருந்து எல்லம், பபிலோன் என்னும் பெயரையும் பெற்றது. மேல்நாட்டறிஞர் கட்மீரா என்னும் பெயர் துரானிய உற்பத்திக்கு உரியதென்றும், பேபெல் செமட்டிய உற்பத்திக்குரியதென்றுங் கூறுகின்றனர். ஆனல் பேபெல் என்னும் பொருளே கட்மீரா என்பதற்கும் என்று கூறுகின்றனர். அவர்கள் இரண்டு சொற்களுக்கும் ஒரே பொருள் கொண்டாலும், அவற்றின் உற்பத்தியைக் கூறும் முறையில் பிழைபடுகின்றனர். கட்மீரா என்பது கதிரவம் என்னும் தமிழ்ச் சொல்லின் உச்சரிப்பு வேறுபாடு எனக்

கூறலாம். பேபெல் என்பது பகல் என்னும் அடியாகத் தோன்றியது. வாய் என்பது வாயிலே. ஆகவே பகல்வாய் என்பதே சூரியனின் வாயில், உச்சரிப்பு வேறுபாட்டால் பேபெல் எனத் திரிந்தது.

## சூரிய சந்திர குலங்கள்

தமிழர் இரண்டு சாதியாராகப் பிரிவதற்குச் சமயமே காரணமா யிருந்ததெனத் தெரிகின்றது. தென்னிந்தியாவில் வாழ்ந்த தமிழர் சிவ வழிபாட்டினர்; வட இந்தியாவில் வாழ்ந்தோர் சூரிய வழிபாட்டினர். தெற்கே யிருந்து அகத்தியர், காசியில் அல்லது வாரணவாசியில் சைவசமயத்தைப் பரப்பும் வரையும் வடக்கே சூரிய மதமே இருந்தது. ஐரோப்பிய நாடுகளில் நிகழ்ந்ததுபோலவே, இந்தியாவிலும் சமயம் தெற்கிலிருந்து மேலே பரவிற்று. வடக்குப் பிரிவினருள் (வட மதுரை) பாஞ்சாலம் குரு முதலிய நாடுகளில் வாழ்ந்தோர் இவ்வணக்கத்தைக் கைக்கொண்டனர். ஆற்றின் மறுகரையி லிருந்தோர் பழைய கொள்கையுடன் வாழ்ந்தனர். சூரியனை வணங்கினோர் சூரிய வமிசத்தினர் எனப்பட்டனர். சிவனை வணங்கினோர் சந்திர வமிசத்தினர் எனப்பட்டனர். சிவபெருமான் முடியிற் சூடியிருக்கும் பிறை, தமிழரைக் குறிப்பதோடு அதைச் சூடுவதால் அவர் தனது மக்களையும் காக்கின்றார் என்பதையும் விளக்குகின்றது. இவர்கள் இரு பிரிவினரா யிருந்தபோதும், அவர்கள் மனுவின் சந்ததியாகிய பொது உற்பத்திக் குரியவர்கள் என்னும் பழைய வரலாற்றை மறந்துவிடவில்லை. கன்ன பரம்பரைக் கதைகள் பலவற்றைத் தொகுத்துக் கூறும் புராணங்கள் மனு என்னும் திராவிட அரசனைப்பற்றிக் கூறுகின்றன. சந்திர வமிசம், பழமை தொட்டுச் சூரிய வமிசத்திலும் பார்க்கப் பெருமைபெற்று விளங்கிற்று. இரு பிரிவினரும் கொள்

கையில் மாறுபட்ட போதும் ஒரு கடவுள் வணக்கமுடை யவரா யிருந்தனர்.

## ஆரியர் வழிபாட்டு முறையில் தமிழரைப் பின்பற்றுதல்.

ஆரியரின் ஒரு தெய்வ வழிபாட்டைப் பார்த்து ஆரியர் படைத்த இந்திரனைத், தமிழர் கூறும் எல்லாம் வல்ல, எங் கும் நிறைந்த கடவுளோடு ஒப்பிட முடியாமலிருந்தமையின் அவர்கள் அதிதி என்னும் பிறிதொரு தெய்வத்தை உண்டு பண்ணினர். இத்தெய்வமும் முதன்மை எய்தியதாக இருக்குவேதம் கூறவில்லை. அதிதி என்பதற்குப் பிரிக்கப் படாதது, முடிவில்லாதது, என்னும் பெயர்கள் வேதத்திற் காணப்படுகின்றன. இந்திரன், வருணன், மித்திரன், சூரி யன் ஆகியோர் முடிவில்லாத வல்லமையாகிய தாயின் புதல் வர்கள் என்றும், ஆதித்தர்கள் என்றும் சொல்லப்பட்ட னர். அதிதியோடு ஒப்பிடத்தக்க கடவுளர், மற்றைய பழைய ஆரிய வகுப்பினரிடையே காணப்படவில்லை. இந்திய நாட்டில் தோன்றியது என்பதற்கு அறிகுறியாக, அப்பெய ருள் கடவுள் என்னும் சொல்லின் பொருள் தொனிக்கின் றது. கடவுளைத் தாய், அவன், அவள், அது என வழங்கும் முறை தமிழர்களுக்குமாத்திரம் உரியது ஒன்றாகும். வேதங் களில் இவ்வகையான புதிய வழக்குகள் காணப்படுகின்றன. இது இரண்டு சாதியார் ஒருமித்துக் கலந்தமையால் ஏற்பட் டது. இப்பொருள்பற்றி ஐரோப்பிய நாட்டு ஆசிரியர்கள் வேண்டிய அளவு எழுதியிருக்கின்றனர். கடவுள், படைத் தல் காத்தல் அழித்தலாகிய இறைவனின் முழுமுதற் றன்மை, மறுபிறப்பு, வினைப்பயன் முதலிய கொள்கைகளை ஆரியர் அறியாரென்றும், அவற்றையெல்லாம் பிறரிடமிருந்து அறிந்திருக்கிறார்களென்றும் அவ்வாசிரியர்கள் கூறியிருங்

கின்றனர். இதை நாம் ஆமோதிக்கின்றோம். ஆரியர் பழங் குடிகளோடு கலந்த பின், தமது பழைய மதத்தையும் நாக ரிகத்தையும் கைவிட்டுப் பழங்குடிகட்குரிய கொள்கைகளைப் பின்பற்றினார்கள் என்று முன் விளக்கியுள்ளோம். இந்து ஆரியருக்கும் மற்ற ஆரியருக்குமுள்ள சமயத் தொடர்பு அறிய முடியாமலிருப்பது ஆச்சரியப்படத் தக்கதன்று.

ஒன்றைக் கொடுத்து ஒன்றை வாங்குவதுபோலக், கட வுளுக்குச் சிலவற்றைக் கொடுத்துப் பதில் உபகாரமாகச் சிலவற்றைக் கேட்பதாகிய வழிபாட்டு முறையையே ஆரியர் அறிந்திருந்தனர். அவர்கள் கடவுள், உயிர் என்பவற்றின் தத்துவங்களை அறியவில்லை.* தாம் இயற்றிப்போந்த கிரி யைகளால் அவர்கள் அவைகளை அறிதல் முடிவதன்று. தமி ழரின் ஞானம் உயர்ந்த உண்மைகளை அடிப்படையாகக் கொண்டதாதலின் அது அசைவில்லாதிருந்தது. இராச புத்தானத்தில் வாழ்ந்த ஆரியர், தமிழ் மதத்தைத் தழுவி

---

* The doctrine of Transmigration is entirely absent from the Vedas and early Brahmanas. It seems probable that the Indian Aryans borrowed the idea from the aboriginies - Cambridge History of India' VOL.I.P. 108 —Macdonald.

No trace of the doctrine of transmigration is found in the Rig Veda and yet no dectrine is so peculiarly Indian.—Origin and development of Bangali Language Vol. 1. P. 42. S. K. Chatterji.

Peculiarly no trace of it (Rebirth) are to be found in the Vedas or in the poems of Homer. The Vedic hero like the Homeric hero goes to dwell in the Elysium of Yama, the proto-man and returns no more to earth—India and the Western world.

· H. G. Rawlinson.

அதன் வளர்ச்சிக்கு அதிகம் முயன்றிருக்கின்றனர். கி. மு. 1000-க்கும் கி. மு. 200-க்கு மிடையிலுள்ள சூத்திர காலத்துப் பலசூத்திர இலக்கியங்களை அவர்கள் செய்தனர். இராச புத்திரரின் அதிகாரத்தின்கீழ் பிராமணர் மிகுந்த ஆதிக்கம் பெற்றனர்.

## புராண மதம்.

திருத்தம் என்னும் பெயருடன் இவர்கள் பல கேடு களைச் செய்தனர். பிராமணக் குருமாரின் அதிகாரத்தால் பல நற்கருமங்கள் விலக்கப்பட்டன. புராணமதம் ஆரம் பித்தது. புதிய சத்திரியராகிய இராசபுத்திரர் நிலைநாட்டிய புராணமதம் கி. பி. ஐந்தாம் நூற்றாண்டில் ஆரம்பமாயிற்று; முற்காலத்தில் சத்திரியர் பிராமணரிலும் மேலானவர்க ளாகக் கொள்ளப்பட்டனர். பிராமணர், சத்திரியரின் மேற் பார்வையின்கீழ் பொருளுக்காக யாகங்களை நடத்தினர். இக்கிரியைகளைச் செய்வதற்காக அவர்கள் மந்திரங்களையும் பாடல்களையும் மனப்பாடஞ் செய்தனர். பலர் அம்மந் திரங்கள், பாடல்களின் பொருளை அறியார். கல்வி சத் திரியனுக்கு உரியதா யிருந்தது. சாமானிய பிராமணனிலும் பார்க்கச் சத்திரியன் கல்வியறி வுடையவனா யிருந்தான். சமய உண்மைகளும் ஞானங்களும் சத்திரியராகிய இராசாயன ரால் வெளியிடப்பட்டன.

## பிராமணர் தமது ஆக்கம் கருதி பழைய நூல்களை அழித்தலும், புதிய நூல்களை இயற்றலும்.

படை எடுத்து வந்தவர்களாகிய இராசபுத்திரர் பிற் காலத்தில் இந்தியாவுக்குத் தலைவராயினர். இவர்களுக்குப் பழைய சரித்திரமாவது, சத்திரியருக்குரிய பெருமையாவது

இல்லை. * இவர்கள் பிராமணரைத் தமக்கு மேலாகக் கொண்டனர்; தாம் சத்திரியர் என்று அழைக்கப்படும் புகழை விரும்பி இராச்சியங்களைப் பெரிதாக்கினர். பிராமணர் தம்மை மேல் என்று எல்லாவிடங்களிலும் நாட்ட முடியவில்லை. வட இந்தியாவில் தங்கள் முதன்மையை நாட்டுவதிலும், நூல்களைத் தம் எண்ணப்படி கையாளுவதிலும் அவர்களுக்கு வில்லங்கம் உண்டாகவில்லை. தென் இந்தியாவில் இவ்வாறு இருக்கவில்லை. இராச புத்திரர் பழைய இராச்சியங்களை வென்று கைப்பற்றியபோது ஒவ்வொரு சாதியினரும் (Caste) முதன்மைக்காகப் போராடினர். இராச புத்திரரின் துணையைக்கொண்டு பிராமணர், சமஸ்தானங்களில் குருக்களாக அமர்ந்தனர். இராச்சிய சம்பந்தமான கலகங்களெல்லாம் சமயத்தின்பெயரால் நடந்தன. இக்கலகங்கள் நாட்டின் நன்மைகளைப் பலவகைகளிற் கெடுத்தன. இக்காலத்தில் தமது பெருமையை நாட்டுவதற்குப் புராணங்கள் பிராமணரால் எழுதப்பட்டன. வட இந்தியாவிற் செய்தது போலத் தென்னிந்தியாவிலும் தமக்கு இடையூறு எனக்கண்ட நூல்களை இனி ஒரு போதும் உலவாதபடி அழித்தனர்; மாற்றியும் கூட்டியும்

* இராச புத்திரர் திராவிட வகுப்பினராவர். இவர்கள் பிராமண மதத்தைத் தழுவித் தாம் ஆரியர் எனத் தமக்கு ஆரிய உற்பத்தியைக் கற்பித்துக் கொள்ளுவாராயினர்; "Later when these non-Aryans from India assimilated Brahmanic culture, their princes claimed connection with the ancient royal house of Aryan of upper India (a thing which was repeated in the case of the new Rajput clans at a later period)—The Development of Bengali Language. P. 41. S. K. Chatterji.

திருத்தியும் எழுதினர். § பிராமணரும் பிறரும் முதன்மைக் காகப் போராடிய காலத்துத் தோன்றிய பாடல்கள் பல தமிழிற் காணப்படுகின்றன. சிவ வாக்கியர் கொங்கணர் முதலானோர், ஒரு தெய்வக் கொள்கையை வற்புறுத்தியும் பிராமணரின் பல தெய்வக் கொள்கையை மறுத்தும் பாடல்கள் செய்தனர்.

## பழைய தமிழர், பிறப்பினுல் உயர்வு தாழ்வு கொள்ளவில்லை

இவ்வாறு தமிழரின் வலிகுன்றிய காலத்தில் பழைய தமிழ் முனிவர்களால் தீது என ஒதுக்கப்பட்ட சாதிக்கோட்பாடு தலை எடுத்தது. சாதிப் பிரிவினையால் தமிழரின் வளர்ச்சி குன்றிற்று. இது பிராமணரின் ஆதிக்கம் மேற்பட்ட

§ The puranas naturally lent themselves augmentations and the Puranic Brahmans used their opportunities to the full, partly with further genuine traditions, but mostly with additions of Brahmanical stories and fables and doctrine and ritual matter. Brahmanic tradition speak from the Brahmanical stand point, describes events and expresses, feelings as they would appear to Brahmans, illustrates Brahmanical ideas, maintains and incalcates the dignity, sanctity, supremacy and even superhuman character of Brahmans, enunciates Brahmanical docrines.........It often introduces kings because kings were their patrons, yet even so the Brahmans' dignity is never forgotten—Ancient Indian Historical traditions PP. 37, 39 F. E. Pargiter.

'In the 4th century A. D. Buddhism declined and there was a Brahmanical revival; and the Brahmans re-edited some of the books of the religious and the civil laws and gave a new and popular shape to them. The old Puranas were also recasted about the period and a good many new ones written—Collected works of R. G. Bhandarkar Vol. II. P. 444.

புராண காலத்தில் தொடங்கியது. தமிழ்நாட்டில் ஒழுக்கமும் தொழிலும்பற்றிச் சில பிரிவுகள் தோன்றியிருந்த போதும், எல்லோருக்கிடையிலும் உண்பனவும் மக்கட்கொடை முதலியனவும் நின்று விடவில்லை. அந்தண மரபினராகிய சுந்தரர், பரவை, சங்கிலியார் என்னும் இரு தாழ்ந்த வகுப்புப் பெண்களை மணந்ததும், வேளாளராகிய அப்பர் அடிகளை அந்தணராகிய அப்பூதி அடிகள் உடன் வைத்து உண்டதும் போதிய சான்றுகளாம். 10-ம் நூற்றாண்டு வரையில் இவ்வகை நிகழ்ச்சிகள் நடைபெற்றமைக்குப் போதிய சான்றுகள் உள. 13-ம் நூற்றாண்டில் அந்தணராகிய அருணந்தி சிவாசாரியார் வேளாளராகிய மெய்கண்ட தேவரிடத்தில் தீட்சைபெற்றார். அந்தணராகிய உமாபதி சிவாசாரியார் வேளாளராகிய மறைஞான சம்பந்தர் என்னும் குருவின் உண்ட சேடத்தைத் தின்றார்.

அக்காலத்து ஒவ்வொருவனதும் விலை மதிப்புக்குரிய செல்வம், சமயமும் கல்வியுமாக விருந்தது. எல்லா வகுப்பினரும் சாதி வேறுபாடின்றி ஆலயங்களில் வைக்கப்பட்டுள்ள திருவுருவங்களின் அருகே சென்று வணங்கினர். அறுபத்துமூவர் எனச் சைவர்கள் போற்றும் அடியார்கள் பல சாதிகளைச் சேர்ந்தவர்களாகக் காணப்படுகின்றனர். "ஆவுரித்துத் தின்றுழலும் புலையரேனும் கங்கைவார் சடைக்கரந்தார்க் கன்பராகில் - அவர் கண்டீர் நாம் வணங்கும் கடவுளாரே", என அப்பர் சுவாமிகள் அறைகின்றார்.

## பிராமணரைப் பொதுமக்கள் ஏற்றுக் கொள்ளவில்லை

பிற்கால அரசரால் பிராமணருக்குப் பெருமை ஏற்பட்டாலும் மக்கள் அவர்களை ஏற்றுக்கொள்ளவில்லை. ஆகவே அவர்கள் பிராமணரைத் தம்மினின்றும் நீக்கினர். பிரா

மணர் ஒழிந்த மக்கள் எல்லோரும் விருந்து கொண்டாடி உடனிருந்து உண்டனர். புதிதாகக் கிடைத்த மதிப்பைப் பாதுகாத்தற்காகப் பிராமணரும் மற்றவர்களின் தொடர்பை விட்டனர். இதுவே தென்னாட்டில் முதன் முதற் றோன்றிய சாதிப் பிரிவாகும். தென்னிந்திய பிராமணர் தமிழ ரென்றே முன்னேரிடத்திற் கூறியிருக்கின்றேம். வட இந்தியப் பிராமணருக்கும் தமிழருக்கும் சில சந்ததிகள் தோன்றியிருக்கலாம். காலகதியில் பகைமை அற்றுப் போனாலும் இப்பொழுதும் மாறுன நிலேயே இருந்து வருகின்றது. மற்றவர்களுக்கும் இவர்களுக்கு மிடையில், தின்பன உண்பன பெண்கோடல் முதலியன இன்றும் நடைபெறுவ தில்லே. உணவும் நீரும் கொடுக்க மறுப்பது சாதிப் பிரட்டத்துக்கு அறிகுறியாகும். இவ்வுண்மை மறுக்கப்பட்டு அவை உயர்ந்த சாதிக்குரிய அறிகுறிகள் என்று தவருகக் கருதப்படுகின்றன. கம்மாளர் பிராமணர் வீடுகளில் உண்ப தில்லே. இதனுல் அவர்கள் தாம் பிராமணரினும் பார்க்க மேல் எனக் கருதுகின்றனர். பிராமணன் வீட்டிலும் வேளாளன் வீட்டிலும் உணவுகொள்ளும் வண்ணுன், கம் மாளன் வீட்டில் உணவருந்த மறுக்கிறுன்; இவை எல்லாம் அன்னியரின் பார்வைக்கு ஆச்சரியமாகத் தோன்றும். தமிழ்நாட்டில் ஒவ்வொருவனும் தனது சாதியைப் பெருமை பாராட்டுகின்றுன். பறையன்கூடத் தனது குலத்தைப் பெருமை பாராட்டி, "பார்ப்பானுக்கு மூப்பன் பறையன் கேட்பாரின்றிக் கீழ்சாதியானேன்" என்னும் முதுமொழியை எடுத்துக் கூறுகின்றுன்.

சாதிப் போராட்டம் மூன்று நூற்றுண்டுகளாக நடந்தது. கொள்கைகள் எப்பொழுதும் ஒரு மாதிரி இருப்பதில்லே. பிராமணரை ஆலயங்களினின்றும் நீக்கவும் அவர்க

ளின் அதிகாரத்தைக் குறைக்கவும் முடியாமல் போகவே, ஒவ்வொரு வகுப்பினரும் தமது சமயச் சடங்குகளைப் புரிவதற்குத் தங்களுக்குள் கல்வி யறிவு ஒழுக்கங்களிற் சிறந்த ஒவ்வொருவரைக் குருக்களாகத் தெரிந்தெடுத்தனர். *

## தென்னிந்திய மக்களின் சமயம்

தென்னிந்திய சமய நிலையங்கள் ஒவ்வொரு குருவின் கீழ் இருந்தன. அக்குரு பிராமண வகுப்பைச் சேர்ந்தவரா யிருப்பது அரிது. தென்னிந்திய மக்களின் சமயக் கொள்கைகளை அறியாத மேல்நாட்டார், புராணமதமும் சங்கராச்சாரியாரின் மாயாவாதமுமே அவர்களுடைய சமயம் என்று எழுதுகின்றனர். இந்தியாவைக் குறித்து எழுதிய ஆசிரியர்கள் வடஇந்தியாவிலிருந்தே எழுதி யிருக்கின்றனர்; பிராமணரிட மிருந்தே அவர்கள் நூல் எழுதுவதற்கு ஆதாரங்களைப் பெற்றிருக்கின்றனர். சங்கரர் சமக்கிருதத்தில் எழுதிய சமயக் கோட்பாடுகளை மாத்திரம் படித்து, அவர்கள் தம் கருத்துக்களை வெளியிட்டிருக்கின்றனர். சங்கரர் தென்னிந்தியரா யிருந்தபோதும் அவருடைய கொள்கையைத் தென்னிந்தியர் ஏற்றுக் கொள்ளவில்லை. தமிழரிற் பெரும்பாலோர் சித்தாந்த சைவர். அக்கொள்கையோடு மாறுபட்ட சங்கரரும் அவர் கொள்கை

---

* பார்ப்பனர் (ஆலயங்களைப் பார்த்துக் கடவுள் ஊழியம் புரிகின்ற தமிழரே) தமிழ் மக்களின் சடங்குகளை முன்னின்று நடத்துவோரா யிருந்தனர். பாரப்பனர் பிராமண மதத்தைக் கைக்கொண்டு மதம் மாறியபோது, தமிழர் தம் சடங்குகளை இயற்றுவதற்குத் தமக்குள்ளேயே சிலரைத் தெரிந்தெடுத்தனர். தமிழ் நாட்டினின்றும் பிரிந்து வாழ்கின்றவர்களாகிய இலங்கையின் வடகோடியிலுள்ள தமிழர் சிலருக்குச் சடங்குகளை இயற்றுவோர் "சைவக்குருக்கள்மார்" எனப்படும் வேளாண் மக்களே. அந்நாடுகள் எங்கும் இவ்வழக்கே நிலவியது. சிறிது சிறிதாகப் பிராமணர் அவர் இடத்தை நிரப்பி வருகின்றனர்.

களும் தெற்கே கவனிக்கப்படாமையால் அவர் வடக்கே சென்றார். அங்கு அவருடைய மதத்துக்குப் பெருமை அளிக்கப்பட்டது. இதனால் சங்கரர் செல்வதன்முன் வடக்கே உள்ளவர்கள் சிறந்த மதக்கொள்கை இல்லாமல் இருந்தார்களென விளங்குகின்றது. சங்கரர் மதத்தைப் பற்றி ஆராய்ந்து எழுதிய மேல் நாட்டார், இந்தியாவிற் கவனிக்கக்கூடிய மதக்கொள்கை இது ஒன்று மாத்திரம் எனக் கருதினர். இதனிலும் மேலான மதக்கொள்கை ஒன்று தெற்கே உண்டு என்பதை மேல்நாட்டவர்கள் இப்பொழுது உணர ஆரம்பித்திருக்கின்றனர். தென்னிந்தியரின் சிவமதம் அந்நாட்டுக்கே சொந்தமானது. அதன் கொள்கைகள் தமிழ் மதத்தைப் பின்பற்றியன. சாத்திரமும் சமயமும் ஒன்றோடு ஒன்று அணைந்து சென்றன. சங்கராச்சாரியர் தமது மதக்கொள்கைகளை வடக்கே பரப்புவதற்கு 2000 ஆண்டுகளுக்கு முன், அகத்தியர் காசியில் (வாரணவாசி) பரப்பியதும் பழைய முனிவர்களால் ஆதரிக்கப்பட்டதுமாகிய சமயம் இதுவே. இச்சமய உண்மைகள் ஆகமங்கள் என்னும் சைவநூல்களில் பொதிந்து கிடக்கின்றன. சமக்கிருதத்தில் மொழி பெயர்க்கப்படாத ஆகமங்கள் அழிக்கப்பட்டன. சமக்கிருத மொழிபெயர்ப்புக்கள் மூலத்தைச் சரியாகப் பின்பற்றிச் செய்யப்பட்டனவோ என்பது சந்தேகத்துக்கு இடம். பிற்காலத்தில் புராணம் எழுதியவர்கள் ஆகமம் இருபத்தெட்டு எனக் கூறியிருக்கின்றனர். புராணங்களுக்குத் தலைமையான ஸ்கந்தத்தின் ஒரு பகுதியான சூதசங்கிதை ஆகமங்களின் பெயரை முதலிற் கூறி, அவற்றின் ஆக்கியோன் ஈசுவரன் எனக் கூறுகின்றது. அது, புராணங்களை மனிதர் செய்தனர் என்றும் குறிப்பிடுகின்றது. ஆகமங்கள் சரித்திர காலத்துக்கு முற்பட்ட பழமையுடையன வென்பது உண்மை. அவை

இருக்கு வேதத்துக்கும் முற்பட்ட பழமையுடையன * ஆரியர் தமிழ் மதத்தைப் பின்பற்றியபோது, எழுதப்பட்ட உபநிடதங்களில் ஆகம உண்மைகள் காணப்படுகின்றன.

சிவன் தமிழரது கடவுள் என எல்லோரும் ஒப்புக்கொள்கின்றனர். சிவமதம் அல்லது தமிழ்மதம் தமிழருக்கு உரியது என ஒப்புக்கொண்டால், ஆகமங்கள் தமிழரால் தமது மொழியில் எழுதிய நூல்கள் என்று ஒப்புக்கொள்ள ஏன் பின்னிற்க வேண்டும்? மத சம்பந்தமான எல்லா நூல்களும் ஆகமங்களையே ஆதாரமாகக் கொண்டன. மத இலக்கியங்கள் மாத்திரமல்ல, பரதநாட்டிற்றோன்றிய சமயக்கொள்கைகள் ஒவ்வொன்றுக்கும் ஆதாரம் இத்தமிழ் ஆகமங்களிற்றான் உண்டு. திருமூலர், தனது திருமந்திரம் ஆகமசாரம் எனக் கூறுகின்றார். இவர் கி. பி. முதல் அல்லது இரண்டாம் நூற்றாண்டில் இருந்தவர் ஆகலாம். § இக்காலம் ஸ்கந்திற்கு முற்பட்டது. ஸ்கந்த புராணத்துக்குச் செய்ததுபோலவே பின் வந்தவர்கள், திருமந்திரத்திலும் பலவற்றைச் சேர்த்தும் திருத்தியும் மாற்றியும் இருத்தல் கூடுமென்று நம்ப இடமுண்டு. திருமந்திரத்தாலும் புராணங்களாலும், புராண காலம் வரையும் ஆகமங்

---

§ 'Apart from the back-ground of Dravidian religion and philosophy Tantrikism and Tantric rites which form the germ of nucleus of the premitive Dravidian religion of the Agamas. The Tantrikism and Tantric rites came from hoary antiquity and from a common feature of the antiquated religions of all the premitive peoples of the world, Dravidians included—Philosophy of the Lingayats P. 279-Sakari, M.A.

But when the subject matter and the contents of the Agamas and the Vedas are closely examined and studied it will be found that the Agamas and the Vedas stand altogether apart as poles asunder—Ibid. P. 269.

கள் இருந்தன என்று கருத இடமுண்டு. புராண மதத்தில் நம்பிக்கை பரவத் தொடங்குதலும் அக்கொள்கைகளுக்கு மாறுயிருந்த ஆகமங்கள் இறந்தன போலும் !

## புராண காலம்

மேல்நாட்டாசிரியர்கள் ஸ்கந்தம் கி. பி. ஒன்பதாம் நூற்றுண்டில் எழுதப்பட்ட நூலெனக் கூறுகின்றனர். பேராசிரியர் பண்டால் (Prof Bandall) கி. பி. 6-ம் நூற்றுண்டில் எழுதிய படி ஒன்று தனக்கு நேபாளத்திற் கிடைத்ததென அறிவித்திருக்கின்றார். இதனால் புராணங்கள் கி. பி. 6-ம் நூற்றுண்டில் இருந்தன என்பதிற் சந்தேகமின்று. தென்னிந்திய ஆலயங்களைப்பற்றியும் தென்னிந்திய சமயக் கொள்கைகளைப் பற்றியும் புராணங்கள் கூறுகின்றமையின், அவை தென்னிந்தியாவில் எழுதப்பட்டனவே. இவை புராணம் என்னும் பெயர்பெற்று வடக்கே செல்ல இருநூறு ஆண்டுகளாவது பிடித்திருக்கும். ஆகவே புராணங்கள் கி. பி. நாலாம் நூற்றுண்டில் எழுதப்பட்ட நூல்கள் எனக் கூறுதல் நியாயமாகும். அவை ஒன்பது அல்லது பத்தாம் நூற்றுண்டு வரையும் பலரால் எழுதிச் சேர்க்கப்பட்ட பலவற்றைக்கொண்டு பெரிதாக்கப்பட்டனவாகும். நேபாளத்திற் காணப்பட்ட புராணம் சங்கராச்சாரியரால் எழுதப்பட்டதாகுமெனக் கருதுகின்றேம். திலாங் (Mr Telang) என்னும் ஆசிரியர் சங்கராச்சாரியர் கி. பி. ஆறும் நூற்றுண்டில் இருந்தாரென்பதற்குப் பல காரணங்கள் காட்டியிருக்கின்றார். கி. பி. ஏழாம் நூற்றுண்டின் முற்பகுதியில் ஹம்சவர்தன என்னும் நேபாள அரசன் சங்கராச்சாரியரின் மாணக்கனென். இவன் தனது மகனுக்குச் சங்கரவர்தான என்று பெயரிட்

* Indian antiquary Vol x 881 P 95.

டான். சிவ புராணங்களும் ஸ்கந்த புராணமும் ஆகமங்களை விட ஸ்மிருதி, பிராமணங்களைப் புகழ்ந்து, ஆரிய வேதங்களுக்கு முதன்மை கொடுக்கின்றன. புராணங்களின் பெயரால் இவ்வாறு கூறும் பகுதிகள், சங்கராச்சாரியரால் அல்லது அவர் மாணுக்கரால் சேர்க்கப்பட்டதாதல் வேண்டும். சங்கராச்சாரியரும் அவர் மாணவரும் சைவசமயத்தவராயினும், அவர்கள் மாணவரும் ஸ்மிருதிகளைப் பிரமாணமாகக் கொண்டனர். அவர்களின் சாதனை ஆகமங்களுக்கு மாறுக விருந்தது. ஆகமங்களைக் கீழ்நிலையில் உள்ளவர்களுக்கும் வேதங்களை மேல்நிலையில் உள்ளவர்களுக்கு மாகக் கடவுள் அருளிச் செய்தார் என அவர்கள் நம்பினர்கள்.

## மதப் புரட்டு

ஆகமக் கொள்கையாகிய தமிழ் மதத்துக்கும், வேதக் கொள்கையாகிய ஆரிய மதத்துக்கும் போராட்டம் இருந்ததாகப் புராணங்களைக்கொண்டு அறியலாம். இவ்விரண்டையும் சமப்படுத்தவே புராணங்கள் எழுதப்பட்டன. புராணங்களை எழுதினேர் ஸ்மார்த்தராகக் காணப்படுகின்றனர். அவர்கள் ஆகமங்களிற் பற்றில்லாமற் போனதோடு, கடவுளைப்பற்றிய உண்மைகளை வேதங்களில் மாத்திரம் காணலாமென்றும், ஆகமங்களாற் பெறப்படும் ஞானம் பயனற்றது என்றும் துணிவுடன் எழுதியிருக்கின்றனர். இவ்வாறு சூதசங்கிதையிற் சொல்லப்படுகின்றது. இக் கொள்கை மறுக்கப்படாமல் இருக்கப்படவில்லை. "கடவுளைக் கண்டு கொண்டும் வேதங்கள் தேடுகின்றன," என்று தமிழ் முனிவர் கூறினர்.

புராணக் கதைகள், புராணங்கள் எழுதப்பட்ட காலத்துச் சம்பவங்களல்ல. புராணம் என்பதற்குப் பழைமையுடையது என்பது பொருள். புராணங்களில் தமிழரின்

பழைய கன்ன பரம்பரைக் கதைகள் காணப்படுகின்றன. தமிழருக்கும் அவரின் பிரிவினராகிய அக்கேடிய சலாடியர்களுக்கும் பொதுவாயுள்ளவற்றுள் சலப்பிரளயம், உலகப் படைப்பு, யுகம் முதலிய வரலாறுகள் சில. இக் கன்ன பரம்பரைக் கதைகளோடு கட்டுக் கதைகளும், பொய்க் கதைகளும் சேர்க்கப் பட்டுள்ளன.

பிராமணரின் பெருமையை விளக்குவதற்காகவே, புராணங்கள் எழுதப்பட்டன. கடவுள் மணஞ்செய்து மக்களைப் பெறுதல், ஐயனர் பிறத்தல், முருகனின் இயற்கைக்கு மாருன பிறப்பு ஆதியவற்றைக் கூறுதல், புராணம் எழுதியவர்களின் மனேபாவனையைப் பொறுத்ததாகும். புராணம் எழுதியவர்கள்,சில சமயங்களிற் கடவுளைப் பசாசுகளுக்கும் கீழான நிலையிற் கொண்டு வந்து விட்டிருக்கின்றனர்.

ஆரிய வேதங்களைச் சூத்திரராவது பெண்களாவது தொடுதல் ஆகாது. சூத்திரர் அல்லது எந்த வருணத்தின் பெண்ணாவது வேதங்களை வாசிக்கவும் கேட்கவும் கூடாது. ஆகவே பெண்களும் சூத்திரரும் மோட்சத்துக்கு அருகர் அல்லர். தமிழருடைய சமயம் ஆண் பெண் என்ற வேற்றுமையின்றி எல்லோருக்கும் பொதுவானது. பதில் பலனை விரும்பாத அன்பே தமிழர் சமயம். யாகங்கள் வாயிலாகக் கடவுளரின் பசியையும் தாகத்தையும் தணித்தால் அக் கடவுளர் பதில் உபகாரமாகச் சில நன்மைகளைப் புரிவர் என்று ஆரியர் கருதினர். தமிழரின் கடவுள் அன்பே.

அன்புஞ் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்
அன்புஞ் சிவமு மொன்ருதல் யாரும் அறிகிலார்
அன்புஞ் சிவமும் ஒன்ருதல் யாருமறிந்த பின்
அன்புஞ் சிவமாய் யாவரும் அமர்ந் திருந்தாரே'-

எனத் திருமூலர் கூறியிருக்கின்றனர்.

முற்காலச் சைவத்துக்கும் இக் காலச் சைவத்துக்கும் வெகுதூரம். தமிழர் ஆரியர் கலப்பும், பொய்யும் புளுகும் புனைந்து பிராமணர் கட்டிய புராணங்களுமே இதற்குக் காரணம். முற்காலப் பிராமணர் உண்மை ஞானத்தில் ஆர்வங் கொண்டிருந்தனர். அவர்களின் பிற்சந்ததியார் ஞானமின்றிப் பிறப்புரிமையைத் தமது பெருமைக்கு அடிப்படை எனக் கொண்டாடினர். பிறர், குற்றங்காண்பார்கள் என்னும் பயத்தால், தம் முன்னோர் மறைத்து வைத்திருந்த வேதங்களையும் பிராமணங்களையும், பிற்போக்குடைய இவர்கள் ஆதரிப்பதோடு, தாம் தமிழரிடம் கற்றுக்கொண்ட ஞானங்களும் வேதங்களில் உண்டு எனக் கூறினர்.

இடியையும், முழக்கத்தையும் உண்டுபண்ணும் பயங்கரமான உருத்திரனைச் சாந்தமும் அன்பும் வடிவமாகிய சிவன் என்று கூறினர். பின் விட்டுணு பிரமா என்னும் இருவரோடும் சிவனைச் சமமாக வைத்து இழிவுபடுத்தினர். இவ்வாறு மும்மூர்த்திகள் எனக்கொண்டு சிவனுக்கு அழித்தற்றொழிலை உரிமையாக்கினர். சிவனே * ஐந்து தொழில்களையும் செய்கின்றார் என்று இன்றும் தமிழர் சொல்கின்றனர். அவர் மும்மூர்த்திகளுக்கும் அப்பாற்பட்டவர் என முனிவர்கள் பாடியிருக்கின்றனர்.

"அரியுமல்ல அரனுமல்ல அயனுமல்ல வப்புறம்
கருமை வெண்மை செம்மை கடந்து நின்ற காரணன்
பெரிதுமல்ல சிறிதுமல்ல பெண்ணு மாணுமல்லவே
துரிதமுங் கடந்து நின்ற தூர தூர தூரமே"

எனச் சிவவாக்கியர் கூறுகின்றனர்.

தமிழர் அன்பைக் கடவுள் என்றனர். அன்பினின்றும் பிரிக்க வொண்ணாத அருளைச் சத்தி, உமை அல்லது

* படைத்தல், காத்தல், அழித்தல், அருளல், மறைத்தல்.

அம்மை என்றனர். உருத்திரனைச் சிவனெனக் கூறினது மல்லாமற் பயங்கரமான துர்க்கை அல்லது காளியைச் சிவனுடைய மனைவியாகவும், புராணகாரர் எழுதிவைத்தனர். துர்க்கை காளி முதலிய பெயர்கள் அக்கினியின் ஏழு நாக்குகளுக்குப் பெயராக வேதங்களிற் சொல்லப்படுகின்றன. அங்கே சொல்லப்பட்ட உருத்திரன் அக்கினியாவன். அன்பும் அருளுமெனக் கொண்டமுறை புராணங்களுக்கும் பிராமணருக்கும் விநோதமாயிருந்தது. ஆகவே அவர்கள் சத்தி என்பது வேறு பெண் தெய்வம் எனக் கருதினர். சிவனின் மனைவியைப்பற்றி அவர்கள் விநோதமான கதைக் கற்பித்திருக்கின்றனர். "சதபதப் பிராமணத்தில், பார்வதி யாகஞ் செய்தாள் என்று சொல்லப்படுகின்றது. ஆனல் சிவனுடைய மனைவியும் தக்கனுடைய மகளுமாகிய பார்வதி, யாகத்தில் உயிர்விட்டாள் என்று புராணகாரர் சேர்த்து எழுதியிருக்கின்றனர். கேனே உப நிடதத்தில் உமஹய்மாவதி இந்திரனுக்குப் பிரமனுடைய தன்மையைக் கூறுகின்றனர். இந்த உமஹய்மாவதி இமயமலையிற் பிறந்தாளென்று புராணங்கள் கூறுகின்றன. இவை எல்லாம் புராண கற்பனைகள். *

## தமிழர் மதம்

பழைய சித்தாந்த முறையாற் கடவுளை விளக்குவதற்கும், பிராமணரது புராணமுறையாற் கடவுளை விளக்குவதற்கும் உள்ள தூரம் மிகப் பெரிது. கடவுள் 'அம்மை அப்பர்' என்னும் தன்மையரென்பது சித்தாந்தத்தின் துணிபு. புராண மதத்துக்கு முன் இதுவே தமிழர் கொள்கையாகவிருந்தது. தமிழர்களின் மனம் உண்மை நெறியை நாடுவதாயிருந்தது. எல்லா உலகங்களும் கடவுளின் ஆணை

* Ancient India P 652—658—R. C. Dutt.

யால் நடைபெறுகின்றன வென்றும், அவை எல்லாம் அவ ரிடத்தில் ஒடுக்கம் என்றும், தன்னயமற்றிருத்தலினுல் மோட்சம் கைகூடும் என்றும், மற்றவர்களுக்குத் தருமஞ் செய்தல் வேண்டுமென்றும் தமிழர்கள் நம்பினுர்கள்.

ஆரியரின் பிராமணங்கள் அல்லது பிற்காலப் புராணக் கொள்கைகள், தமிழரின் நியாய முறையான கொள்கை களைத் தமிழ் நாட்டினின்றும் அகற்ற முடியவில்லை. ஆரிய மதக் கலப்பினுல் தமிழர் சமயம் நிலைகுலைந்தது. அப் பொழுது புத்த சமயந் தோன்றி அக்காலத்துக் கேற்றவாறு பொய்யான கொள்கைகளை எதிர்த்தது. ஒரு ஆயிரம் ஆண்டுகளுக்குப் பின் பிராமணர் அதை நெருப்பாலும், வாளாலும், போராலும் இந்தியாவினின்றும் துரத்தினர். இம்மதத்தை எதிர்த்த மதங்கள் உயிர்பெற்றன.

புராண மதந்தான் சரியான இந்துமதமென அயல் நாட்டவர்கள் நினைக்கின்றனர். அதில் தமிழருடைய கொள்கைகள் முற்ருக இருக்கின்றனவென்று கூறமுடி யாது. இப்புராண மதத்தை முனிவர்கள் எதிர்த்தார்கள். ஆயினும் அறியாமையுடைய மக்கள் உள்ளத்தில் புராணக் கொள்கைகள் பதிந்துவிட்டன. பிராமண மதத்தினுற் கெடுதியுற்ற போதும், தென்னிந்திய ஞானம் சித்தாந்தம் என்னும் பெயரோடு இன்றும் வழங்குகின்றது.

சித்தாந்த சாத்திரம், மெய்கண்ட தேவரால் 13-ம் நூற் ருண்டிற் செய்யப்பட்டது. அச்சாத்திர ஞானம் ஆகமங் களை ஆதாரமாகக் கொண்டது. இந்தியாவில் எவ்வகை யான சமயந் தோன்றினுலும் அதற்கு அடிப்படையா யுள் ளது தமிழ் ஞானத்தைக் கூறும் ஆகமமே. ஆகமங்கள் தமிழ் ஞானத்தையும் தெக்கணமூர்த்தியா யிருந்து தம்மை அருளிச்செய்த கடவுளைப் பற்றியும் கூறுகின்றன. தெக்

கணு மூர்த்தி என்பதற்குத் தென் தேசத்துக் கடவுள் என்பது பொருள். ஆகமங்களைக் கடவுள் மகேந்திர மலையிலிருந்து சொன்னார் என்று ஐதீகம் உண்டு. மகேந்திர மலை, திருநெல்வேலிக்கும் திருவிதாங்கூருக்கும் இடையில் மேற்குக் காற்றுடி மலையிலுள்ள பொதிய மலையிலுள்ளது. மூல ஆகமங்கள் இல்லாமல் இது சம்பந்தமாக அதிகம் கூறமுடியாமல் இருக்கிறது. இப்பொழுது கிடைத்திருக்கும் விவரங்களால் ஆகமங்கள் பல இருந்தனவென்றும், அவற்றுள் இருபத்தெட்டுப் பிரதானமானவை என்றும் அறிந்து கொள்ளுதல் ஆகும். இவை எல்லாம் காலத்தின் வாய்ப்பட்டு மடிந்தன. இரண்டொரு சைவ ஆகமங்களைத் தவிர வேறு கிடைக்கவில்லை. அவ்வொன்று இரண்டும் சமக்கிருத மொழிபெயர்ப்பா யுள்ளன. மற்றவை மொழிபெயர்க்கப் படாமலே இறந்தன. பல நூற்றாண்டுகளாகச் சைவத்தை எதிர்த்த மதமே கிடையாது. சரித்திர காலத்துக்கு முன் தொட்டு ஆகம ஞானத்தைத் தழுவிய மதமே இந்தியாவில் இருந்தது. புத்த சைன மதங்கள் தோன்றித் தெற்கே சென்று சைவசமயத்தை நசுக்கத் தொடங்கினதினாலும், புராண இலக்கியங்களாலும் உண்மையான சைவம் தனது தூயநிலையை இழந்து, கட்டுக் கதை யளவில், நிலவத் தொடங்கிற்று. அப்பொழுது தமிழருக்குத் தமது மதக் கொள்கைகளை நாட்டிப் பிற மதங்களைக் களைவது அவசியமாயிற்று. இப்பொழுது ஆகம ஞானங்கள் திரட்டப்பட்டுச் சித்தாந்த நூல்கள் எழுதப்பட்டன. இவற்றின் தொகை பதினான்கு. இவற்றில் பிற் காலத்தைய நூற்களிலே அநேகம் சமக்கிருதச் சொற்கள் காணப்படுகின்றன.

புராணகால ஆரம்பத்திலிருந்து சமக்கிருதத்துக்கு மேன்மை ஏற்பட்டது. இம்மேம்பாட்டால் சமக்கிருதம் கட

வுள் தன்மை உள்ளதென்னும் மூடக்கொள்கையும் எழுந்தது. அம்மொழியில் எழுதப்பட்ட வேதங்களில் எல்லா வகையான ஞானமும் உண்டென்னும் நம்பிக்கையும்ஏற்பட்டது. இடைக்காலத்தில் இலாத்தின் கிரீக் முதலிய மொழிகள் ஐரோப்பாவில் எப்படி மதிக்கப்பட்டனவோ அப்படியே வடமொழி, தமிழிலும் சிறப்புடையதாகக் கொள்ளப்பட்டது. கிரேக்க இலாத்தின் மொழிகளைப்போல வடமொழி சமய மொழியாகவும் வந்தது. தமிழ் ஞானத்துக்குச் சித்தாந்தம் என்னும் பெயர் இடப்பட்டது நூதனமன்று. சித்தாந்த சாத்திரத்தில் கடவுள், உயிர், உலகம் என்னும் மூப்பொருள்களின் உண்மைகள் கூறப்படுகின்றன. தமிழரின் ஞான முதிர்ச்சியைத் தேவார திருவாசகங்களைக் கொண்டறியலாம். கி. பி. இரண்டாம் நூற்றுண்டில் விளங்கியவர் என்று கருதப்படும் திருமூலர் இச்சாத்திர உண்மைகளைத் திருமந்திரத்தில் விளக்குகின்ருர். திருமூலர் கூறுவதுபோலத் திருமந்திரம் ஆகமங்களின் சுருக்கமாகும். ஆகவே ஆகமங்கள் திருமூலர் திருமந்திர காலத்தும், சித்தாந்த சாத்திரங்கள் செய்தவர்கள் காலத்தும் இருந்தன வென்று தெரிகின்றது. பழைய தமிழர் சமய ஞானத்தைக் கூறும் நூல்களின் தொகைகள் ஆகமங்கள் எனப்படும். அத்தகைய நூல்களை எழுதியவர்களின் பெயர்கள் மறந்து விடப்பட்டன.மனிதர் பிழை செய்யும் இயல்பினர் என்னும் எண்ணத்தினலேயே முன்னோர் அவை கடவுளால் அருளிச் செய்யப்பட்டன என்று கருதினர். வேத பாடல்களைச் செய்த ஒவ்வொரு முனிவரின் பெயரும் காணப்படுகின்றது.

வடக்கே வாழ்ந்த தமிழர் சூரியனை வணங்கினர்களென்றும், தெற்கே உள்ளவர்கள் சிவனை வணங்கினரென்றும்

அகத்தியர் வடக்கே சென்று சைவத்தைப் பரப்பினரென்றும் முன் ஓரிடத்திற் கூறினோம். ஆகவே சைவத்தைப் போலவே ஆகமங்களும் தெற்கே மகேந்திர மலையில் தோன்றின என்று கருத இடமுண்டு *

வேதம் பசு என்றும், ஆகமம் அதன் பாலென்றும் சிலர் கூறுவதுண்டு. ஆராய்ச்சி முறையில் வேதமும் ஆகமமும் நேர் விரோத முடையனவாய்க் காணப்படுகின்றன. வேதங்கள் பல தெய்வ, இயற்கைப் பொருள் வணக்கங்களைக் கூறுகின்றன. ஆகமங்கள் ஒரே கடவுளை முழுமுதலாகக் கொண்டு வழிபடும் முறையைக் கூறுகின்றன. ஆகமங்கள் வேதங்களுக்கு விரோதமானவை என்றும், ஆகம ஞானம் வேதஅறிவை விட மிக மேலானதென்றும் எம். நாராயணசாமி ஐயர் கூறுகின்றனர். §

புராணங்கள் வேதங்களைப் புகழ்வதில் ஆச்சரியம் ஒன்றும் இல்லை. புராணங்கள் தமிழ்க் கொள்கைகள் சிலவற்

* திருவாசகத்திற் பல விடங்களில் ஆகமங்கள் மகேந்திரத்திற் றோன்றின என்று சொல்லப் படுகின்றது. "மன்னுமாமலை மகேந்திரவெற்பன்" "தென்பாண்டி நாட்டான்". மகேந்திரமலை மந்திர மலை எனப்படும். அதற்குக் 'குருவாய்' என்பதும் பெயர். குருவாய்க்கு எதிர் கரையிலுள்ளது அலைவாய். இங்குக் குமரன் கோட்டம் இருக்கிறது. செந்தில், திருச்செந்தில், திருச் செந்தூரென்பது அதற்கு மறு பெயர்கள். குருவாய் சிவனுக்கு இடமென்று கருத இடமுண்டு. இதனையே சமக்கிருத புராணக்காரர், இமயமலைச் சிகரம் ஒன்றெனக் கொண்டனர். மனுவின் பேழை தங்கியதாகச் சதபத பிராமணம் கூறும் வடமலை பொதியில் அல்லது சீ பருவதமென அறிய முடியாமல் இருக்கின்றது. தென்னாட்டுக் கதைகளை வடநாட்டார் பார்த்தெழுதுமிடத்துத் தென்னிந்தியாவில் நிகழ்ந்தவற்றை எல்லாம் வடநாட்டில் நிகழ்ந்தனவாக எழுதியிருக்கின்றனர்.

§ From the little I have seen of them they (the Agamas) seem to be opposed to Vedas almost aspire to arrogate to themselves position much superior.

ளோடு வேதக் கொள்கைகள் சிலவற்றையும் கலந்து எழுதப் பட்ட நூலாகும். புதிய மக்களுக்கு வேதங்கள் ஆதார மாயின. புராணப் போக்குக்கு ஆகமங்கள் இடங்கொடா மையால் அவர்கள் ஆகமங்களிலும் பார்க்க வேதங்களே பிரமாணமெனக் கூறினர். வேதங்களுக்குமுன் ஆகமங் கள் உண்டென்னும் உண்மை ஆராய்ச்சியால் பெறப்படு தலின், வேதத்தினின்றும் ஆகமம் பிறந்ததென்னும் கொள்கை பொய்யாகின்றது. யாகங்களைக் கூறும் ஆரியர் நூல்கள் இறந்தன. தமிழ் மதத்தைத் தழுவிய ஆரியராலும் ஆகமங்கள் கைக் கொள்ளப்பட்டன.

வேத பாடல்களில் ஆலய வழிபாடு கூறப்படவில்லை. ஆலயங்களும், ஆலய வழிபாடும் ஆரியருக்கு உரியனவல்ல. பழைய நாள் முதல், கடவுளின் இருப்பிடமாகிய ஆலயங்க ளிருந்த தென்னிந்திய அசீரிய பாபிலோனிய நாட்டுக்களின் ஆலய அமைப்பு ஒரே வகையாகக் காணப்படுகின்றன. தமி ழரின் சரித்திரத்தை அறியாமையால், மேல்நாட்டாசிரியர்கள் தமிழர் கட்டிட அமைப்பு முறையை அசீரிய பாபிலோனிய ரிடமிருந்து கற்றார்கள் எனக் கூறினர். மா பாரதம் சிவா லயங்களைப்பற்றிக் கூறுகின்றது. அருச்சுனன் சிவபெரு மானைக் கைலாயத்திற். சென்று வழிபட்டான். கைலாய மென்பது குருச்சேத்திரத்துக்குப் பக்கத்தில் ஒரு குன்றின் மேலுள்ள ஆலயமாகும். யுத்த காலத்தில் ஓர் இரவில் அருச்சுனன் கிருட்டினனோடு கைலாயத்துக்குப் போய்த் திருப்பி வந்தான் எனச் சொல்லப் படுகிறது. கைலாயம் என்பது கோயில் என்பதன் திரிபு ஆதல் கூடும்.

## தமிழ் குன்றியதற்குக் காரணம்

பிராமணர்களின் வெறுப்பு, தமிழ்மொழி குன்றுவதற் கும், தமிழ் நூல்கள் பலவற்றின் அழிவுக்கும் ஏதுவா யிருந்

தது. தமிழ்நாட்டின் பல பகுதிகளை வாய்ப்படுத்திக் கொண்ட கடல், பல நூல்களையும் கொண்டது. கி. பி. 10-ம் நூற்றாண்டில் பிராமணராலும், 14-ம் நூற்றாண்டில் மகமதியராலும் அநேக நூல்கள் அழிக்கப்பட்டன. அரசரின் பரிபாலனத்தின் கீழ்த் தோன்றிய நூல்கள் காணப் படவில்லை. அந்நூல்கள் 14-ம் நூற்றாண்டில் மகமதியரால் அழிக்கப்பட்டன என்று வின்ஸ்லோ பாதிரியார் கூறியுள்ளார்.

பிராமணர் தாம் அழிக்க முடியாத நூல்களைச் சிதைவு படுத்தினர். வெள்ளத்தாலும் நெருப்பாலும் நேர்ந்த கொள்ளையில் இது மேலானது. தமிழ் நூல்களை எடுத்துச் சமக்கிருதத்தில் மொழிபெயர்த்துப் பல கேடு செய்திருக்கின்றனர். பிழையான வழி காட்டியினும், வழி காட்டியில்லாமல் இருப்பது நன்று எனக் கோவர் (Gover) என்னும் ஆசிரியர் கூறியுள்ளார். மண்டகோப உபநிடதத்தில் “ சிவன் என்னும் நாமத்தைக் கூறுகிறவன் புலையனாயினும் அவனோடு உண், இரு” என்று வரும் பகுதி மாக்ஸ்மூலரின் மொழி பெயர்ப்பிற் காணப்படவில்லை என்று காசி வாசி செந்திநாதையர் கூறியிருக்கின்றனர். இவ்வாறே நூல்களில் மாற்றங்களும் இடைச் செருகல்களும் நுழைந்தன.

## § மேசர் செனரல் வேர்லாங் என்பவர், ஆரியருக்கு நூல்களை இயற்றி உதவியவர்கள் தமிழரே எனக் கூறுவர்

உபநிடதங்கள், தரிசனங்கள், பிராமணங்கள் தத்துவ நூல்கள் முதலியன புத்தர் காலத்துக்கு முன்னேயே உள்ளன. திராவிடரே இந்தியாவில் கி. மு. 3000 முதல்

§ Short Studies of Comparative Religions—Major-General J. G. R Forlong PP—250, 251, 253, 265.

கி. மு. 2000 வரையில் ஆட்சி புரிந்தார்கள் என்பதற்குரிய ஆதாரங்கள் கிடைக்கின்றன. திராவிட பண்டிதர்களே சில பிராமணங்களையும் உபநிடதங்களையும் இயற்றினார்கள். அவர்கள் கல்வி அறிவில்லாத ஆரியரின் துதிகள், பாடல்கள் முதலியவைகளை ஒட்டி வேத பாடல்கள் சிலவற்றையும் செய்தார்களாகலாம். திராவிட பண்டிதராகிய கபிலரின் தத்துவக்கொள்கைகளை நோக்குமிடத்து, வேத பாடங்களைச் செய்தல் அவர்களுக்கு எளிதாக இருந்திருக்கலாம். எந்த ஆரியனாவது வேதங்களை ஒழுங்குபடுத்தித் தொகுக்கவில்லை. வேதபாடல்களை ஒழுங்குபடுத்திய வியாசர் திராவிட வகுப்பினரே. வியாசரின் பிறப்புக்குப் பராசரைத் தொடர்புப்படுத்தி அவர் பாதி ஆரிய வழியையும் பாதி திராவிட வழியையும் சேர்ந்தவரென ஆரியர் கூறுகின்றனர். அக்காலத்தில் ஆரியரில் ஒருவனாவது யமுனைக் கரைகளை அடையவில்லை. கல்வி திராவிடர் இடமே இருந்தது. அவர்கள் உயர்ந்த தத்துவக்கொள்கை யுள்ளவர்களா யிருந்தனர்.

வேதாந்தம் என்பது, புத்தசமயம் வடநாட்டில் வேரூன்றிய காலத்தில் கொண்டுவரப்பட்ட சீர்திருத்தமதக் கொள்கை. இது, ஆரியரின் இயற்கை வணக்கத்தைச் செப்பஞ் செய்யும்பொருட்டு, திராவிட மக்களாற் கொண்டு வரப்பட்ட புதிய சீர்த்திருத்தம் என்பது நிச்சயமாகும். இது, கபில மதக் கொள்கையினர் சைன புத்தக் கொள்கைகளையும் புகுத்திச் செய்த சீர்திருத்தமேயாகும். அபஸ்தம்பர் முதல் சங்கராச்சாரியர் வரையில், ஆரிய மக்களுக்கு வழிகாட்டிகளாயிருந்து அவர்களுக்குப் பல நூல்களைச் செய்து அளித்தனர். வேதபாஷ்யம், உபநிடதங்கள் முதலிய நூல்களை மேல்நாட்டறிஞரும் பெரிதும் வியந்து பாரார்ட்டுகின்றனர்.

## சர். சார்லஸ் எலியட் கூறுவது

"இந்திய மக்களின் சமயம் இந்திய நாட்டில் வந்து குடியேறிய ஆரியரால் வெளியிலிருந்து கொண்டுவரப்பட்டதென்றும், திராவிட நாகரிகத்தோடு சம்பந்தப்பட்டபோது அது சில மாறுதல்களை அடைந்ததென்றும் பலர் தவறாகக் கருதுகின்றனர். ஆரியரின் சமயம் திராவிடருடைய பழைய சமயத்தோடு ஒப்பிடத்தக்கதாயுள்ளது என்று கூற ஆரியரின் பழைய இலக்கியங்கள் இடந்தரவில்லை. இந்திய மக்களின் மதமே யென்றும், அது ஆரியக் கலப்பினால் சில மாற்றங்களை அடைந்ததென்றும், நாம் நடுநிலைமையோடு கூறுகின்றோம். சிவன், கிருட்டினன், துர்க்கை முதலிய கடவுளர்களும், மறுபிறப்பு, அவதாரம்போன்ற கருத்துக்களும் வேதங்களாற் சிறிதும் அறியப்படாதவை. அது இந்திய மக்களின் சமயப்போக்கை ஒத்த கொள்கைகள், பாரசீகம், கிரீஸ் அல்லது மற்றைய ஆரியநாடுகளிற் காணப்படவில்லை."

## முடிவுரை

இன்று ஆரியர் நாகரிகம் என்று கருதப்படுவன அனைத்தும் தமிழர் நாகரிகமே. வெளியினின்றும் வந்த ஆரியர் மிகச் சிலரே. அவர்கள் தமிழ் வெள்ளத்துட் புகுந்து மறைந்துவிட்டனர். இன்று தம்மை ஆரியர் எனக் கூறிக் கொள்வோர் உண்மையில் ஆரியர் அல்லர். அவ்வாறாகவும், ஆரியரே தமிழரினும் தலை சிறந்தவர்கள் என்றும், அவர்களே தமிழருக்கு ஆசானாயிருக்கத் தகுதியுடையவர்கள் என்றும், தாம் அவ்வாரியரின் வழித்தோன்றல்கள் என்றும் சொல்லிக்கொண்டு ஒரு கூட்டத்தினர் தமிழர் தோள்மீது ஏறிக் குதிரை விடுகின்றனர். தமிழர் தமது மடமையை உணர்ந்து குதிரைவிடுகின்ற அன்னோரை உதறித்தள்ளி விடுதலை அடைதல் வேண்டுமென்பது இந் நூற் கருத்தாகும்.

---

Hinduism and Buddhism—Vol I-P. X. V Sir Charles Elliot

Q. H. M. S. No. 459. C. 2000 7-10-46.
Printed at the Sri Magal Vilasam Press, Madras.

S.L.V. Press, 50, Walajah Rd., Mount Rd., Madras.
Q.H.M.S. 459—C. 2000-10-46.